**அரசு ஊழியர்**

மார்ச் 2018

மலர் : 39 இதழ் : 3

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,

மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,

எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*

*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*

*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


**சூடாக ஒரு கோப்பை சூப்**

## மானுட தர்மம்

*அறிவினை விரிவு செய்.*
*அகண்டமாக்கு.*
*விசாலப் பார்வையால்*
*விழுங்கு மக்களை.*
*அணைந்து கொள்.*
*உன்னைச் சங்கமமாக்கு.*
*மானிடச் சமுத்திரம்*
*நானென்று கூவு.*
*பிரிவினை எங்கும் பேதமில்லை.*
*உலகம் உண்ண உண்*
*உடுத்த உடுப்பாய்!*

**- புரட்சிக்கவி பாரதிதாசன்**

# நீண்ட காலத்திற்கு பிறகு அல்ல, விரைவில் வெற்றி பெறுவோம்!

அரசு ஊழியர் - ஆசிரியர் இயக்கங்களில் கடந்த காலத்தில் நடைபெற்ற போராட்டங்களே இன்று நாம் பெற்று வரும் உரிமைகளின் அடித்தளமாகும். பல்வேறு காலகட்டங்களில் நாம் நடத்திய போராட்டங்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கியது. அத்தகைய போராட்டங்களில் ஜாக்டோ-ஜியோ சமீபத்தில் நடத்திய “தொடர் மறியல் போராட்டமும்” ஒன்றாகும்.

லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை குழி தோண்டி புதைக்க நினைத்த அரசுகளின் கொள்கைகளை அடியோடு மாற்றியமைக்க நினைப்பது, தாக்குதலை தகர்ப்பது என்பதற்கான போராட்டங்களை நடத்துவது அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமையாகும். ஆனால், அதனை நிலைநாட்ட வேண்டிய அரசுகளும், நீதிமன்றங்களும் சில நேரங்களில் தவறான அணுகுமுறையை கையாளுகிறபொழுது வீதி மன்றத்தில் நாம் களமிறங்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டு விடுகிறோம்.

இப்படிப்பட்ட நிலையில் நடந்ததுதான் ஜாக்டோ-ஜியோ போராட்டம். அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் நிலுவை கோரிக்கைகளான புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் நீதிமன்றத்தில் நமது வழக்கு முடிவுக்கு வராத நிலையும் தொடர்வதால் வீதிமன்றத்தில் தொடர் மறியல் என முழக்கமிட முடிவு செய்தோம்.

21.2.2018 முதல் 24.2.2018 முடிய மிக சக்தியாக நடந்தது. இந்த நாட்களில் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை குலுங்கியது. காவல் துறை தவியாய் தவித்தது. நான்கு நாட்களும் திட்டமிட்டபடி எழுச்சியோடு நடத்தியது சிறப்பாக இருந்தது. நான்காம் நாள் போராட்டத்தினை பெண்கள் தலைமையேற்று நடத்தியது வரலாற்றுச் சிறப்புமிக்கது. அன்றைய தினம் நாம் எடுத்த முடிவு அரசையும், காவல் துறையையும் கலங்க வைத்தது. மறியல் போராட்டத்தினை பத்திரிகைகளும், ஊடகங்களும் அன்றாடம் தமிழகம் முழுவதும் வெளிக் கொண்டு வந்தது நமக்கு அரவணைப்பாக இருந்தது. அரசு அழைத்துப் பேசவில்லை என நாம் நினைக்கவில்லை. நாம்



நடத்திய போராட்ட வீச்சு அரசை அச்சப்பட வைத்துள்ளது. ஒரு வேளை நம்மை அழைத்துப் பேச அரசு அஞ்சுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

நமது கோரிக்கைகளை இனியும் நிறைவேற்ற மறுத்தால், இந்த அரசு கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளது. இந்தப் போராட்டம் "முதல் தொடர் மறியல் போராட்டம்" நிச்சயம் முத்திரை பதிக்கும். வரலாற்றுப் பதிவு உருவாக்கியுள்ள போராட்டம். போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நமக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் போராட்டத்திற்கு தடை விதிக்க முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநாட்டியுள்ளது வரவேற்கத்தக்க தீர்ப்பாகும். இந்த தீர்ப்பு ஊழியர்களின் நலனுக்கு எதிரான நிலை எடுத்து வருபவர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. கூட்டு சக்தியை எந்த சக்தியாலும் நெருங்க முடியாது என்பதற்கு இந்த மறியல் போராட்டம் வரலாற்றில் ஒரு மைல்கல்.

இதுபோன்ற போராட்டங்களை நடத்தும்போது அரசின் அணுகுமுறை நமக்கு சுதந்திரப் போராட்ட வரலாற்றை நினைவுக்குக் கொண்டு வருகிறது. சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திர போஸ் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது.

"நமது சரித்திரத்தில் ஏற்பட்டுள்ள இந்த எதிர்பாராத சிக்கலான வேளையில் உங்களுக்கு ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற தற்காலிக நிகழ்வுகளை கண்டு துவண்டு விடாமல், தளர்ந்து விடாமல், நம்பிக்கையை இழக்காமல் இருந்தால், நம்மை அசைக்க வேறு எந்த சக்தியும் இந்த உலகில் இல்லை. நீண்ட காலத்திற்கு பிறகு அல்ல. விரைவில் இந்தியா விடுதலை பெறும்".

நமது மறியல் போராட்டமும் அப்படித்தான். இன்றைய சூழ்நிலையில் போராட்டங்கள் வாழ்க்கையல்ல. வாழ்க்கையே போராட்டம்தான். நாம் நடத்திய போராட்டங்கள்தான் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் இன்னல்களை தீர்க்கும் அருமருந்தாகும்.

தமிழக அரசு நமது தொடர் மறியல் போராட்டத்தை உணர்ந்திருக்கும் என நம்புகிறோம். உணராதது போல நடிக்கிறது. விரைவில் போராடும் ஜாக்டோ-ஜியோவை அழைத்துப் பேசி தீர்வு காணும் என்று நம்புகிறோம். அதற்கான இடைவேளைதான் நமது வீரஞ்செறிந்த மறியல். உணர மறுத்தால் மார்ச் 24 அன்று மாவட்ட அளவில் நாம் நடத்தும் பேரணியை அடையாளமாகவும், மே 8 சென்னையில் நடைபெறும் மாநிலம் தழுவிய முற்றுகைப் போராட்டத்தில் சென்னை கோட்டையை ஜாக்டோ-ஜியோவின் கைவசமாக்குவோம்.

❖

## ஒப்பந்த முறை அரசாங்கம்... அவுட் சோர்சிங் ஆட்சி முறை... தினக்கூலி அமைச்சர்கள்... அரசாண்டால் அரசு நிர்வாகம் சீர்கெட்டு சிதிலமடைந்து போகும் என்பதற்கு இதுவே அத்தாட்சி

### அரியணை மோகமும் அரசாணை வேகமும்



அரசாங்க வேலை என்பது இன்னும் சில வருடங்களில்... இல்லை இல்லை... இன்னும் சில மாதங்களிலேயே அரிதான விஷயமாகிவிடும் என்ற அபாயத்தை அரசாணை எண்.56 என்ற மெல்ல கொல்லும் விஷ ஊசி மூலம் இந்த அரசாங்கம் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறது. கடந்த அக்டோபர் மாதத்தில் ஊதிய மாற்றம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் (செய்தி வெளியீடு எண்.678 நாள் 11.10.2017) அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும், இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந்துரைகளை அளித்திட “பணியாளர் சீரமைப்புக் குழு’’ (Staff Rationalization Committee) உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்போதே நாம் இந்த அறிவிப்பு அரசுப் பணிகளை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட தொங்கவிடப்பட்டுள்ள கத்தி என்றும், இதனால் மக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவித்து, மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு இந்த ஏற்பாட்டை தவிர்க்க வேண்டும் என்றும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

ஆனால், மக்கள் நலனா...? அப்படியென்றால் என்ன? என்று கேள்வி கேட்கும் அரசாக இவ்வரசு செயல்படுகிறது என்பதை, மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு எதிராக... அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளும் அரசின் முடிவுகளும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத்தினருக்கும், அரசியல்வாதிகளுக்கும், ‘‘மக்கள் நலன்’’ என்ற வார்த்தையின் உள்ளார்ந்த அர்த்தம் புரியவில்லை என்பதைவிட, புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைப்பதுதான் இதன் பொருள். இத்தகைய அரசாணைகளும், உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போல் தற்போது அரசு அலுவலகங்கள் இல்லை. புதிய பொருளாதார திட்டம் என்ற திட்டம் எல்லா மக்களும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ சித்தாந்தத்தை சுக்குநூறாக்கி யார் எப்படி போனால் என்ன, மக்களின் சுமைகளையும் நலன்களையும் அரசு ஏற்கக்கூடாது என்கிற வேதாந்தத்தை விதைத்தது. அதுதான் கொஞ்ச கொஞ்சமாக செயல் வடிவம் பெற்று மக்கள் நலன், பொது சேவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்டுவிடும் அரக்கனாக உருமாறியிருக்கிறது. ஒரு சில அமைப்புகள் மட்டும் இதை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கின்றன. தொலைதூரப் பார்வையில் பார்க்கும்போது இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தால், மக்கள் நலனும், உதவும் உள்ளமும், சேவை மனப்பான்மையும் முற்றிலுமாக ஒழிந்து, நாடு முழுவதும் காட்டுமிராண்டித்தனமே நிறைந்து நிற்கும்.

எந்தஒரு அரசு அலுவலகத்திற்குச் சென்றாலும் அங்கு பல இருக்கைகள் காலியாகவே காணக் கிடப்பது கண்கூடே. ஓய்வுபெற்றுச் சென்றவர்கள், பணியிட மாற்றம் சென்றவர்களின் இடங்கள் அப்படியே விடப்பட்டிருப்பதும் இன்றுவரை தொடர்கிறது. இது ஆண்டுதோறும் அதிகரித்து அதிகரித்து தற்போது பெரும்பாலான அரசு அலுவலகங்களில் மூன்று அல்லது நான்கு அரசு ஊழியர்களின் வேலையை ஒரு ஊழியரே பார்க்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. எல்லா அரசுத் துறை சங்கங்களிலிருந்தும் எழும் கோரிக்கைகளில் நிரந்தர இடம் பிடித்துவிட்ட கோரிக்கையாக காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது தற்போது கோரிக்கையாக இல்லாமல் ஓலமாக மாறியுள்ளது. 2001 முதல் 2005 வரை அரசுத் துறைகளில்,



ஆசிரியர் பணியிடங்களில் எந்த ஊழியரும் சேரமுடியாத வகையில் பணி நியமனத் தடைச் சட்டம் அரசுப் பணிகளை முடக்கி விட்டது. மக்கள் சேவை செய்யக்கூடிய அரசு அதிகாரிகள் இல்லாமல் மக்கள் நலத்திட்டங்கள் எப்படி அவர்களுக்குப் போய்ச் சேரும்? ஊழியர்களை நியமிக்காமல் அரசு காலியான பணியிடங்களை நிரப்பாமல் விட்டதன் மூலம் அரசு ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்கிற பழியை அரசு ஊழியர்கள் மீது மக்களுக்கு இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. போதுமான ஊழியர்கள் இல்லாமல் அரசின் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் அனைத்து துறைகளில் ஊழியர்கள் பணிச்சுமையுடன்சிரமப்பட்டு வருகின்றனர்.

ஆக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவின் நோக்கம் எந்தெந்தப்பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கலாம் என்பதை விட எந்தெந்தப் பணிகளை அரசின் வசம் விட்டுவைக்கலாம் என்பதானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அரசுப் பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும் ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப் பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, தனியார் வசம் அவற்றை ஒப்படைப்பதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை. இதை இப்போரே நாம் எதிர்க்காவிட்டால் ஏற்கனவே காலியாக விடப்பட்டுள்ள மூன்றறை லட்சம் பணியிடங்களில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து இலவு காத்த கிளியாக காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலமும், பட்டப்படிப்பு படித்துவிட்டு தேர்வாணைய தேர்வுகளக்காக தயாராக இருக்கும் மாணவர்களின் எதிர்காலமும் குழிதோண்டி புதைக்கப்பட்டுவிடும். ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமிப்பதன் மூலமாக வேலை வாய்ப்பகங்களில் அரசு அல்லது அரசு சார்ந்த துறைகளில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் சுமார் 37 லட்சம் இளைஞர்களும் 42 லட்சம் பெண்களும் திருவோடு ஏந்தி தெருவோடு போகும் அவலமோ தீவிரவாத கும்பலோடு சேர்ந்து தேசத்துரோகத்துக்கு துணை போகும் அபாயமோ ஏற்பட்டுவிடும். இதை ஒப்பந்த முறையில் செயல்படும் இந்த அவுட் சோர்சிங் அரசு புரிந்துகொள்ள வைக்க உடனடியாக ஒரு சமுதாய இயக்கம் வீறுகொண்டு எழ வேண்டி இருக்கிறது. அதன் துவக்கமாக அரசு ஊழியர்களாகிய நாம் இருப்போம். அரியணை மோகத்திற்காக இளைஞர்களின் வருங்காலத்தை சீரழிக்கும் வகையில் அவசர அவசரமாக பிறப்பிக்குப்பட்டுள்ள அரசாணை எண்.56ன் வேகத்தை நிறுத்தி அரசுப் பணிக்கும் மக்கள் நலன்களும் பாதுகாக்க அரசுக்கெதிரான போராட்டங்களை முன்னெடுப்போம்.

## முரண்களைக் களைய நெஞ்சமில்லை, குறை தீர்க்கும் குழுக்களுக்கோ பஞ்சமில்லை

தமிழகத்தில் தண்ணீருக்கு பஞ்சம் வரும், மின்சாரத்திற்கு பஞ்சம் வரும், வேறு எதற்கெல்லாமோ கூட பஞ்சம் வரும். ஆனால் இந்த ஐஏஎஸ் அதிகாரிகள் கொண்ட குழுக்களை அமைப்பதற்கு மட்டும் பஞ்மே வராது. யாராவது ஒரு கேள்வி கேட்டால் உடனே ஒரு குழு. புதிய பென்சனுக்கு ஒரு குழு, ஊதிய மாற்றம் ஏற்படுத்த ஒரு குழு, அதில் உள்ள முரண்பாடுகளை சீரமைக்க ஒரு குழு என குழுக்கள் அமைத்து தமிழக அரசு சாதனை படைத்திருக்கிறது. இதுவரை எந்தக் குழுவும் ஒழுங்காக அறிக்கை அளித்ததாக சரித்திரம் இல்லை. புதிய ஓய்வூதியத் திட்டத்தை நீக்குவதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவே நம் கைப்புண்ணுக்கு கண்ணாடி. அந்தக் குழு இதுவரை மொத்தம் 10 முறை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் அரசு ஊழியர்களின் பிரச்னையை இத்தகைய குழுக்கள் ஒருபோதும் தீர்க்காது என்பதும், அப்படியே அக்குழுக்கள் அறிக்கை அளித்தாலும் அவற்றால் முரண்பாடுகள் தீராது என்பதும் ஆகும்.

ஊதியங்களை வரையறுக்கும் விஷயத்தில் தமிழக அரசு தொடர்ந்து பல குளறுபடிகளை வேண்டுமென்றே செய்வதும், அதை அரசு ஊழியர் சங்கமும், மற்ற சங்கங்களும் சுட்டிக்காட்டி போராட்டம் நடத்தினால், அதை சரி செய்வதற்காக குழுக்கள் அமைத்து கண்துடைப்பு நாடகம் நடத்தி மீண்டும் குளறுபடிகளுடன் அரசாணைகள் வெளியிடுவதும் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்துவரும் நம்பிக்கை துரோகங்களாகும். ஊழியர் சங்கத் தலைவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி முரண்பாடுகளைக் களைய அரசை பலமுறை வலியுறுத்தியும், வற்புறுத்தியும் அரசு தன்னுடைய இயல்பு இதுதான் என்று மீண்டும் மீண்டும் உணர்த்தி வருகிறது.

இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் சட்டசபையில் கவர்னர் ஆற்றிய உரை மூலமாக, எடப்பாடி அரசு, தமிழக அரசு ஊழியர்களுக்கு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊதிய மாற்ற முரண்பாடுகளை ஒப்புக்கொண்டு அதைக் களைய குழு அமைக்கப்படும் என அறிவித்து அதன்படி குழுவும் அமைத்துள்ளது.இத்தகைய குழுக்கள் அது காலங்களை விழுங்கி ஏப்பமிட்டதுதான் மிச்சம் என்பதும், அமைக்கப்பட்ட குழுக்கள் மேலும் மேலும் முரண்பாடுகளுடன் அறிக்கை தாக்கல் செய்தன என்பதும்தான் அரசு ஊழியர்கள் கண்டுவரும் வரலாறு.

ஊதிய மாற்றங்களில் முரண்பாடுகள் வரும் அளவுக்கு, அதுவும் தொடர்ந்து பதினோறு ஆண்டுகளாக முரண்களை தீர்க்க முடியாத அளவுக்கு, அதிலும், மேலும் மேலும் புதிய முரண்பாடுகளை ஏற்படுத்தும் அளவுக்கு, முரண்பாடுகளைக் களையும் குழுவின் தலைவர்களாக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் செயல்பட்டிருக்கிறார்கள் என்றால், ஒன்று அவர்கள் இந்திய ஆட்சிப் பணி கல்வியை முறையாக பயிலாதவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் நல அரசின் மகோன்னதத்தை மறந்த ஆட்சியாளர்களின் அடிவருடிகளாக இருக்க வேண்டும். ஆக, இந்த குழுக்கள் காலத்தை இழுத்தடித்து கழுத்தை அறுக்கும் நயவஞ்சக அரசின் நரித்தன வேலைக்கு என்பது வெட்ட வெளிச்சம். முரண்பாடுகள் உள்ள அளவுக்கு அரசாணைகள் வெளியிடுவதும் அதை சுட்டிக்காட்டி கோரிக்கைகள் வைத்து போராடிய பின்னர், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையில் குழுக்கள் அமைப்பதும், அவற்றின் காலவரைகளை நீட்டிப்பதும், காலத்தை இழுத்தடிக்காமல் குறித்த காலத்திற்குள் அறிக்கை தரச்சொல்லி ஊழியர் சங்கங்கள் போராட்டம் நடத்தினால், முரண்பாடுகளுடன் அரசாணைகள் வெளியிடுவதும் இப்போது ஊரறிந்த ராஜதந்திரமாக ஆகிவிட்டது. கடந்த பத்து வருடங்களில் ஊதிய மாற்ற முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட குழுக்களும் அவை அறிக்கை தர எடுத்துக்கொண்ட காலவரைகளையும் ஒருமுறை திரும்பிப் பார்த்தால் இந்த அரசாங்கம் அரசு ஊழியர்களுக்கு செய்து கொண்டிருக்கும் நம்பிக்கைத் துரோகங்கள் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் ஊதிய மாற்றம் குறித்த வழக்கு நிலுவையில் உள்ள போதே அரசாங்கம் ஊதிய மாற்றத்தில் குளறுபடிகள் உள்ளதாக கவர்னர் உரை மூலம் ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளதும், அதை சரிசெய்ய புதிதாக குழு அமைக்கப்பட்டுள்ளதும் வெறும் கண்துடைப்பு நாடகம் தவிர வேறில்லை.

எனவே, கவர்னர் உரையில் அறிவித்துள்ளபடி ஊதிய மாற்ற முரண்பாடுகளை களைய தமிழக அரசும், அதன் அமைச்சர்களும், தமிழக மக்களின் நலன்களை கூறுபோட்டு விற்கிறார்கள் என்பதற்கு காவரியில் தொடங்கி, ஜல்லிக்கட்டு, நீட் தேர்வு, மீனவர் பிரச்னை என தொடர்ந்து தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் துரோகங்களின் பட்டியலில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் விரிவுரையாளர் தேர்வுக்கு தமிழே தெரியாத பிற மாநிலத்தவர் 90 சதவீதம் பேர் சேர ஏதுவாக விதிகள் வளைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 தேர்வில் வெளி மாநிலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு வெளியிட்டு தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்புகளில் துரோகம் இழைத்து, இப்போது அடுத்த இடியாக அரசுத் துறைகளில் உள்ள தேவையற்ற பணியிடங்களைக் கண்டறிய எஸ்.ஆதிசேஷய்யா என்ற ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது. இதன் வேலை எந்தெந்த அரசுப் பணிகளை தனியார் வசம் ஒப்படைக்கலாம் என பரிந்துரை செய்வதாகும். ஏற்கெனவே அரசுத் துறைகளில் பல்லாயிரக்கணக்கான காலிப் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கும் நிலையில் தமிழக அரசின் இந்த முடிவு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் சூழ்நிலையில், தமிழகத்தின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் பிற சூழ்நிலைகள் காரணமாக பெரு நிறுவனங்கள் தொழில் தொடங்க முன்வராத நிலையில், தமிழக மாணவர்கள்/இளைஞர்கள் பத்தாம் வகுப்பு படித்திருந்தால் குரூப்-4 தேர்வெழுதி ஏதேனும் ஓர் அரசுத் துறையில் சேர்ந்து விடலாம் என்று எண்ணியிருந்த எண்ணத்தில் ஏற்கெனவே (வெளி மாநிலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று) கொள்ளி வைத்த தமிழக அரசு, இப்போது இருக்கின்ற அரசுத் துறைகளை இழுத்து மூடிவிட முடிவெடுத்திருப்பது வேலை வாய்ப்புகளுக்காக வேலை வாய்ப்பு மையங்களில் பெயர்களை பதிவு செய்துவிட்டு வாய்ப்புக்காக காத்திருக்கும் தமிழக இளைஞர்களின் வாயில் மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறது.

### மக்கள் நலனை மறந்த நடவடிக்கைகள்

ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கத்தினரும் தமிழக அரசின் நலன்களை பாதிக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை சமீபகாலமாக நாம் பார்த்து வருகிறோம். தங்கள் சுய நலனுக்காக, நாற்காலி ஆசைகளுக்காக தமிழகத்தின் நலன்களை அதிகார வர்க்கம் பறிக்கப் பார்ப்பதும், அதற்கு தமிழக முதல்வரும், அமைச்சர்களும் உடந்தையாக இருந்து தமிழக மக்களின் நலன்களை தங்கள் சுயநலத்திற்காக தாரை வார்த்துக் கொடுப்பதும் வெட்கக்கேடான அரசியலாகும்.

மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடரவே இந்த ஏற்பாடுகள்.

## வரையறுக்கப்பட்ட ஊதியம் இன்னும் கிடப்பில்

கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள் போன்ற சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற தனி கோரிக்கை வைக்கப்பட்டு, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிட்ட சட்டமன்ற விதி எண். 110ன் கீழான அறிக்கையில் இது குறித்து ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவித்திருந்தார். அது குறித்த கோரிக்கைகள் அரசிடமும், அலுவலர் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், கிராம பஞ்சாயத்து செயலர் மற்றும் அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு மீண்டும் சிறப்பு காலமுறை ஊதியத்தை 2.57 காரணியால் பெருக்கி மீண்டும் திருத்திய வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதென்பது மேற்கண்ட பணியாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

தொடர்ந்து தமிழக அரசு இப்பிரிவினரை வஞ்சித்து வரும் நிலையில், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வை குறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப் பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக்கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/ வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட செவிலியர்கள் கூட ஒப்பந்த அடிப்படையில் மிகக்குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு உயிர்காக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சார்புடைய நிறுவனங்கள்போல் புதிதாக துவக்கப்படும் அலுவலகங்களில் அமர்த்தப்படும் பணியாளர்கள், ஒப்பந்த முறையிலான அடிமாட்டு கூலி முறையில் அமர்த்தப்படும் போக்கானது உடனடியாக கைவிடப்பட்டு, ஏற்கெனவே மேற்கண்ட மத்திய / மாநில அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு, முறையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தொகுப்பூதிய/ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பல போராட்டங்களை நடத்திவரும் சூழ்நிலையில், தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழக மாணவர்கள், இளைஞர்களின் நலன்களும், வேலைவாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் வேலை வாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

அரசுத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களையும் இதர பணியிடங்களையும் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்களாக மாற்றுவதற்கான ஆதாரமாய் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.56ஐ உடனடியாக தமிழக அரசு திரும்பப் பெற்று, அரசு வேலை என்ற லட்சியக் கனவில் தமிழகத்தில் உள்ள இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும். அதேபோல புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் காலவரையை மீண்டும் மீண்டும் நீட்டிக்காமல் உடனடியாக புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெற வேண்டும். ஊதிய மாற்றத்தில் ஏற்பட்டுள்ள 21 மாத ஊதிய நிலவைத் தொகையை உடனே வழங்க வேண்டும், ஊதிய மாற்ற முரண்களை சரி செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகள் நிறைவேறும் வரை **சென்னையில் கோட்டை முற்றுகை** நடைபெறும் எனவும், அரசு செவி மடுத்து தீர்வு காணாவிட்டால் போராட்டம் தீவிரமடையும் என்பதையும், அரசுக்கு உணர்த்தும் போராட்டமாக இது மாறும் என்பதையும் அரசு உணர்வது நல்லது. அன்றின் இவை அனைத்துக்கான விலையை இவ்வரசு கொடுத்தே தீர வேண்டிய நிலை தோன்றுவதை யாராலும் தடுக்க முடியாது.

ஆகவே, **தோழர்களே போராட்ட களத்தில் பெரும் துணிவோடு நிற்போம்!**

**நமக்கான உரிமைகளை வென்றெடுக்கும் வரை கண்துஞ்சாமல் காரியமாற்றுவோம்!**

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

## ஜாக்டோ-ஜியோ போராட்டத்திற்கு ஆதரவு கோரி அனைத்து கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதம்

நாள் : 20.02.2018

வணக்கம்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகள் மற்றும் அரசுத் துறைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களாகிய நாங்கள் ஜாக்டோ-ஜியோ என்ற பெயரில் கூட்டமைப்பாக இயங்கி வருகிறோம். கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அரசு வழங்க வேண்டிய நியாயமான உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதால், அதைப் பெறுவதற்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசுக்கு இணையான ஊதியம் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என்று ஒப்புக்கொண்ட தமிழக அரசு அதைத் தராமல் கடந்த இருபது ஆண்டுகளாக ஏமாற்றி வருகின்ற போதிலும், அதனைப் பெறுவதற்காக மக்கள் நலன் மற்றும் மாணவர்கள் கல்வி பாதிக்காத அளவில், அரசாங்கத்திடம் பல்வேறு பிரதிநிதித்துவங்கள், கோரிக்கை மனுக்கள், முறையீடுகள் போன்றவைகள் மூலமாக தொடர் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். ஆனால் அரசாங்கம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கோரிக்கைகளை உதாசீனப்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல் 2016ஆம் ஆண்டு ஏற்படுத்த வேண்டிய ஊதிய மாற்றத்தை - மத்திய அரசு ஊழியர்களுக்கு அது வழங்கப்பட்டு அந்த ஊழியர்கள் அதற்கான புதிய ஊதியம் மற்றும் 1.1.2016 முதலான ஊதிய நிலுவைத் தொகைகளையும் பெற்றுவிட்ட நிலையில் - தமிழக அரசு ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக வழங்காமல் காலம் கடத்தி வந்ததால் பொதுமக்களை பாதிக்காத அனைத்து வகையான போராட்டங்களையும் முன்னெடுத்து, அரசுக்கு எங்கள் நிலைப்பாட்டை உணர்த்திய பின்னரும் அரசாங்கம் எங்கள் வாழ்வாதார கோரிக்கையான ஊதிய மாற்றம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெறுதல், ஊதிய முரண்பாடுகளைக் களைதல் போன்ற எதைக் குறித்தும் சிறிதும் கவலைப்படாமல் தொடர்ந்து கால நீட்டிப்பு செய்து வந்த சூழ்நிலையில், வேறு வழியில்லாமல் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு உந்தப்பட்டோம் என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

திரும்பப் பெறுவதாக ஒப்புக்கொள்ளப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை. வல்லுநர் குழுவின் அறிக்கையும் பெறப்படவில்லை, காலவரையறையும் நவம்பர் 30க்கு பின்னர் நீட்டிக்கப்படவில்லை.

மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி.ஜெயலலிதா அவர்கள் 2011ஆம் ஆண்டு தன்னுடைய தேர்தல் அறிக்கையில், அ.தி.மு.க. ஆட்சி அமைத்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்படும் என்று அறிவித்தது இன்று வரை செயலாக்கப்படவில்லை. அதை வலியுறுத்தி பல போராட்டங்கள் நடத்திய பின்னர் 2016ஆம் ஆண்டு சட்டசபையில் சட்டசபை விதி எண்.110ன் கீழ் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெறுவது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அதன்பேரில் பரிசீலிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டார். திருமதி சாந்தா ஷீலா நாயர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அதன் காலவரை நான்குமுறை

நீட்டிப்பு செய்யப்பட்டு அதன்பிறகு அது என்னவாயிற்று என்று தெரியாமலேயே கைவிடப்பட்ட நிலையில், அதுகுறித்து கேட்டு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தீவிரப் போராட்டத்தில் இறங்கிய பின்னர், திரு.டி.எஸ். ஸ்ரீதர், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் செப்டம்பர் 2017ல் புதிதாக ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. அந்த வல்லுநர் குழு 2017 நவம்பர் 30க்குள் அது அறிக்கை அளிக்கும் என்றும், அதன்பேரில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்த தமிழக அரசு, நவம்பர் 30ஆம் தேதி வல்லுநர் குழுவின் அறிக்கையை பெறாமல் விட்டதோடு, அது குறித்து எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் 2018 ஜனவரி 31 வரை காலவரை நீட்டித்தும்கூட இன்று வரை அறிக்கை வெளியிடப்படாமல் மேலும் காலவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்ட வழக்கு மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் விசாரணைக்கு வந்தபோது, நவம்பர் 30ஆம் தேதிக்குள் பங்களிப்பு ஓய்வூதியம் திரும்பப் பெறுவது குறித்த வல்லுநர் குழு அறிக்கை நிச்சயமாக பெற்று அதன்பேரில் முடிவெடுக்கப்படும் என்று ஒப்புக்கொண்ட அரசு, தற்போது நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குறுதியை மீறியதோடு மட்டுமல்லாமல், வல்லுநர் குழு என்ன ஆனது என்பது குறித்தும் இதுவரை அறிக்கை எதுவும் வெளியிடவில்லை. மதுரை உயர் நீதிமன்றத்தில் அரசுத் தலைமை வழக்குரைஞரின் உறுதிமொழியை மாண்புமிகு நீதியரசர்கள் தங்கள் இடைக்கால உத்தரவில் பதிவு செய்துள்ள நிலையில், தமிழக அரசின் இந்த செயல்பாடு நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் செயலாகும். உயர்நீதிமன்றம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான உரிமைகளை அரசாங்கம் நிறைவேற்ற உத்தரவிடுவதாக உறுதியளித்துள்ளதால் நாங்கள் அரசின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் குறித்த மௌன மறுப்பை எதிர்த்து போராட்ட களம் போகாமல் காத்திருக்கிறோம் என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டுவர விழைகின்றோம்.

தற்போதைய ஊதிய மாற்றம் முரண்பாடுகளுடன் அறிவிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், 21 மாத ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகையையும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க மறுத்துள்ளது அநீதியின் உச்சகட்டம் .

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பொதுமக்களுக்கும், சமுதாயத்திற்கும் பணிசெய்ய நியமிக்கப்பட்டுள்ள சேவகர்களே என்பதை எப்போதும் நாங்கள் மறந்தது கிடையாது. அதேசமயம் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று சட்டங்களாலும், நிர்வாக விதிமுறைகளாலும் உறுதிபடுத்தப்பட்டுள்ள உரிமைகளை தருவதற்கு அரசாங்கம் காலதாமதம் செய்வதும், மறுப்பதும், குறைப்பதும், நிலுவைகளை தர முடியாது எனக் கூறுவதும் எந்த வகையிலும் ஏற்கமுடியாது. 2014ஆம் ஆண்டில் நிதியமைச்சராக இருந்த திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் சட்டமன்றத்தில், 2014-15ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வரவு-செலவு திட்ட உரையில் “2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும், பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது'' என தெரிவித்தது பொய்யுரை என்று தற்போது உறுதியாகிவிட்ட நிலையில் உரிமைகளை போராடிப் பெறுவதைத் தவிர வேறு வழி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு இல்லை. கெஞ்சிப் பார்த்து, கோரிப் பார்த்து, ஆர்ப்பாட்டம் நடத்திப் பார்த்து அசையாத அரசை, இறுதிக் கட்டமாக அதன் நிர்வாகத்தை வேலை நிறுத்தப் போராட்டத்தின் மூலம் நிறுத்தி கவனத்தை ஈர்ப்பதைத் தவிர வேறு ஆயுதம் எதுவும் எங்களுக்குக் கிடையாது.

ஆனால் 11.10.2017ஆம் தேதி ஊதிய,மாற்றத்தை, முரண்பாடுகளுடன் அறிவித்த தமிழக அரசு, 21 மாத ஊதிய மாற்ற வித்தியாச நிலுவைத் தொகையை தர முடியாது எனவும் அறிவித்துள்ளது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மத்திய அரசு ஊழியர்கள் என அனைவரும் ஊதிய மாற்றத்தின் முழுப் பலனையும் பெற்றுள்ள நிலையில் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது மாபெரும் அநீதியாகும். இந்த நிலையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களாகிய நாங்கள் அனைவரும் சென்னை உயர்நீதிமன்றத்தைத்தான் நம்பியிருக்கிறோம். வேலை நிறுத்தப் போராட்டம் சட்டப்படியான உரிமையல்ல எனக் கூறும் மாண்பமை நீதிமன்றங்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்படியான உரிமைகளை அரசாங்கங்கள் பறிப்பதையும், நிறுத்தி வைப்பதையும்

அனுமதிக்கக் கூடாது. இப்போது, தமிழக அரசு எங்களுக்கு இழைத்துள்ள அநீதியை தட்டிக்கேட்டு சென்னை உயர்நீதிமன்றம், அரசாங்கத்திற்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்கும் என்ற திடமான நம்பிக்கையில் போராட்டங்களுக்கு போகாமல் காத்திருக்கிறோம்.

ஒப்புகொண்டபடி சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காமல் ஊதிய மாற்ற அறிவிப்பு வந்துள்ளது ஊழியர்களிடையே மீண்டும் போராட்டக்களம் போக வேண்டும் என்ற கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் மற்றும் ஆசிரியர் பணித்தொகுதியில் வரும் பகுதி நேர ஆசிரியர்கள், தொகுப்பூதிய ஆசிரியர்கள், கணினி ஆசிரியர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்-ஆசிரியர்களின் உழைப்பு, முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

மேற்படி சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற தனி கோரிக்கை வைக்கப்பட்டு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிட்ட சட்டமன்ற விதி எண்.110ன் கீழான அறிக்கையில் இது குறித்து ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவித்திருந்தார். அது குறித்த கோரிக்கைகள் அரசிடமும், அலுவலர் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 2.57 காரணியால் பெருக்கி திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு குறைந்தபட்ச ஊதியம் ரூ.3,000/- ஆகவும் அதிகபட்ச ஊதியம் ரூ,11,000/- ஆகவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது மேற்கண்ட ஊழியர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட அரசினை தாங்கள் வலியுறுத்த வேண்டுகிறோம்.

தாங்கள் எங்கள் கோரிக்கையின் பேரில் உள்ள நியாயத்தையும், சட்டப்படி வழங்க வேண்டிய 21 மாத வித்தியாச நிலுவையை மறுத்துள்ள அரசாங்கத்தின் நயவஞ்சகத்தையும், நீதிமன்றத்தில் கொடுத்த உறுதிமொழிப்படி வல்லுநர் குழுவின் அறிக்கையை நவம்பர் 30ம் தேதிக்குள் பெற்று அதன்மேல் நடவடிக்கை மேற்கொள்ளாததுடன், அதுபற்றி அறிவிப்பு எதையும் வெளியிடாமல் ஏமாற்றியிருக்கும் செயலையும், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவதாக ஒப்புக்கொண்டு அதை ஊதிய மாற்றத்தில் செய்யாமல் ஏமாற்றி உள்ளதையும் கவனத்திற்கு கொண்டு வந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தமிழகத்தின் அரசின் பல துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சட்டப்படியும், அரசியலமைப்புச் சட்டப்படியும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளை பெற்றுத்தர தங்களின் மேலான ஆதரவினை வழங்கிட கேட்டுக் கொள்கிறோம்.

சட்டப்படி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பெற வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுமானால் நாங்கள் மீண்டும் போராட்டக் களம் போக வேண்டிய நிர்பந்தம் எழும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். தாங்கள் எங்களுக்கான நியாயங்களை பெறுவதற்கான எங்களால் நடத்தப்படும் அனைத்து இயக்கங்களுக்கும் ஆதரவு நல்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டாக இந்த கடிதத்தை தங்களுக்கு நேரடியாக வழங்கி தங்களின் மேலான ஆதரவினை நல்கிட கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் போராட்டங்களை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தேடிச் செல்லவில்லை. அதேசமயம் போராட்டங்கள் எங்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதால் நாங்கள் வீதியில் இறங்கி போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

எனவே எங்களது நியாயமான வாழ்வாதார உரிமைகளுக்காகவும், கோரிக்கைகளுக்காகவும் அரசின் கவனத்தை ஈர்த்திடவும், கோரிக்கைகளுக்கு அரசு செவி சாய்க்கும் வரையிலும் **தலைநகர் சென்னையில் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர், அரசு ஊழியர்கள் பங்கேற்கும் தொடர் மறியல் போராட்டம் வரும் 21ஆம் தேதி (21.2.2018) முதல்** நடத்திட உள்ளோம்.

தமிழகத்தில் ஆசிரியர், அரசு ஊழியர்கள் என அனைத்துத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த தொடர் மறியலில் பங்கேற்று, மறுக்கப்பட்டு வரும் உரிமைகளை பெறும் வரை போராட்டக் களம் காண்பது எனவும் முடிவெடுத்துள்ளோம்.

சட்டமன்றத்தில் மட்டுமல்லாதது பொது வெளியிலும் எங்கள் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற அனைத்து விதத்திலும் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒருங்கிணைப்பாளர்கள்

---

## “மன்னாளனே”

*வானம் பொய்த்ததால்*
*மானம் போனதாய்*
*பலிபீடம் ஏறி*
*உயிர் போகும்*
*ஏழை விவசாயிகளின்*
*ஈனமுனங்கல்*
*கேட்க மறுக்கும்*
*அதிகார வர்க்கமே...*

*ஏதிலிகளின்*
*குரல்களை*
*உதாசீனப்படுத்திடின்*
*சுட்டெரிக்கும்*
*அவர்கள் கோபம் உங்களை*
*அந்தநாள் வெகுதொலைவில்*
*இல்லை என்பதுணர்வீர்*

*கண்ணகி மூட்டிய தீயைவிட*
*பாரதி சொன்ன*
*அக்கினிக் குஞ்சைவிட*
*விஞ்ஞான அதிநவீன*
*ஏவுகணைகளைவிட*
*அதிவேகத்தில் பரவும்*
*நெருப்பது என்பதை*
*உணர்வீர்*

*வாழும் பயிர்களுக்கு*
*தண்ணீர் வேண்டுவோர்*
*குரல் உங்கள்*
*செவிகளில் ஏறவில்லையோ*

*ஆனால், அதை*
*பாட்டிலில்*
*அடைத்து பணம்*
*பார்க்கும்*
*பாமர முதலாளிகளுக்காக*
*பரிதவிக்கிறீர்களே*
*உங்கள் பாக்கெட்டும்*
*நிரப்புவதால்தானே*

*ஏழை சொல் அம்பலம்*
*ஏறாது என்பது*
*எத்தனை நாள் என்பதும்*
*வெகு விரைவில் தெரியும்*
*காளைக்காய்*
*காரியமாற்றிய*
*காளையர் கூட்டம்*
*திரும்பினால்*
*நாடு பரபரக்கும்*
*காடு கழனியாகும்*
*அதுவரை காத்திருப்பாய்*
*என் மன்னாளனே*

*பலி பீடத்தை*
*தூக்கி எறிந்து*
*காத்திருப்பாய்*
*என் மன்னாளனே!*

**- மதுரை சுகி**

# ஊழல்-உளவு-அரசியல்..சுயசரிதை..

## சவுக்கு சங்கர்

பெரணமல்லூர் சேகரன்

"**து**ணிவு என்பது கண்மூடித்தனமாக அபாயத்திலிருந்து மீள்வது மட்டுமல்ல. அதனை எதிர்நோக்கி வெற்றி பெறுவதும்தான்"

- ஜீன் பால் ரிக்டர்.

ஓர் அரசு அலுவலகத்தில் எளிய எழுத்தராக.. இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் காவல் துறை அமைச்சுப் பணியில் அரசு ஊழியராக வாழ்வைத் துவங்கியவர் எல்லோரையும் போல் பத்தோடு பதினொன்றாக தம் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளாமல், தமது மனசாட்சி முழு விழிப்புடன் இருந்ததால் தன்னைச் சுற்றி நடைபெறும் தவறுகளையும் அதிகார முறைகேடுகளையும் அமைதியாகக் கடந்து செல்லாமல் சமரசமற்ற போராளியாகத் திகழ்ந்துதுள்ளார் சங்கர் என்னும் ஓர் அரசு ஊழியர். அவரது நெருப்பாற்றுப் பயணம்தான் ஊழல்-உளவு-அரசியல் எனும் சவுக்கு சங்கரின் சுயசரிதை.

சங்கர் எனும் அரசு ஊழியர் சவுக்கு எனும் இணைய இதழில் தமிழக அரசின் அதிகார வர்க்கத்தை.. குறிப்பாக காவல் துறையின் கறை படிந்த பக்கங்களைப் படம் பிடித்துக் காட்டி வந்தமையால் சவுக்கு, சங்கரின் பெயருடன் ஒட்டிக் கொண்டது.

ஒட்டு மொத்த இந்தியாவையும் புரட்டிப் போட்டதோடு ஆட்சியையும் கவிழ்த்தது தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரம். அரசியல் பிரமுகர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் என்று தொடங்கி தமிழக உளவுத் துறை சட்ட விரோதமாகப் பலருடைய உரையாடல்ககளை ஒட்டுக் கேட்ட விவகாரம் வெளியில் வந்தபோது, தன் வாழ்வை அடியோடு மாற்றியமைக்கும் பெரும் புயலை சங்கர் சந்திக்க நேர்ந்தது. ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்கிய தொலைபேசி ஒட்டுக்கேட்பு விவகாரம் அவருடைய அரசுப் பணியைப் பறித்துக் கொண்டதோடு, அவரைச் சிறையிலும் தள்ளி, அவர் எதிர்காலத்தையே கேள்விக்குரியதாக்கியது. காவல் துறை தொடங்கி சைபர் கிரைம் பிரிவு முதல் சிபிசிஐடி வரை ஒரு பெரிய பலமிக்க குழு சங்கரை வேட்டையாட ஆரம்பித்தது. தொடர் வேட்டை, அதிலிருந்து மீள சங்கர் முன்னெடுத்துச் சென்ற தொடர்ச்சியான முயற்சிகளின் முனைப்பே இந்நூல்.

சுயசரிதை எனின் பிறப்பு முதலான நிகழ்வுகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கும் என எதிர்பார்த்தால் ஏமாற்றமே விஞ்சும். ஆனால் அரசு ஊழியர் வாழ்வில் நுழைந்த நாள் முதலான பதிவுகளை நயம்பட திறந்த புத்தகமாய் மனம் திறந்துள்ளார் சங்கர்.

அரசுப் பணியில் நுழைந்தவுடன் அவர் பணியாற்றிய அலுவலகத்தில் உதவி மேலாளர் மூலம் பெரியாரின் நூல்கள் கிடைக்கப் பெற்று வாசித்து அதுவரை புரியாமல் இருந்த மர்ம முடிச்சு அவிழ்ந்ததாக சங்கர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்துடன் அறிமுகம் ஏற்பட்டு தினமும் சங்க அலுவலகம் சென்று வந்ததையும் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது. அரசு ஊழியர் சங்க நிகழ்வுகள் தவிர்த்து, இதர இடதுசாரி சங்கங்களின் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றில் கலந்து கொண்டதும் வழக்கமாகிப் போனது என அவர் குறிப்பிட்டுள்ளதிலிருந்தே அவரது துணிவான பொதுப் பாதையின் தோற்றுவாயை உணர முடிகிறது. மேலும் மைலாப்பூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்ட எம்.ஆர்.அப்பனுக்காக வீடு வீடாகச் சென்று சங்கர் பிரச்சாரம் செய்ததை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்தே இவரது துணிவைத் தெரிந்து கொள்ளலாம்.

இவரது பணிக் காலத்தில் தமிழ்நாட்டை ஆண்ட தி.மு.க., அ.தி.மு.க ஆகிய கட்சிகள் ஒன்றை மற்றொன்று அழிக்கவும் காழ்ப்புணர்ச்சியில் கவிழ்க்கவும் ஊழலுக்கெதிரான நடவடிக்கை எடுக்கவும் அதிகார துஷ்பிரயோகம் செய்து மாறிமாறி மேற்கொண்ட பழிவாங்கும் நடவடிக்கைகளை ஆங்காங்கே குறிப்பிட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

வழக்குகள் மட்டுமல்ல, வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அரசியல் தலையீடு இருக்கும் என்பதையும், திரைக்கு முன்னால் நடப்பவற்றை விட, திரைக்குப் பின்னால் நடப்பவையே பலவற்றைத் தீர்மானிக்கின்றன என்பதை அனுபவபூர்வமாகவும் இந்நூலில் வடித்துள்ளார்.

2001-ல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, தன் அகம்பாவத்தையும், ஆணவத்தையும் குறைத்துக் கொண்டு, நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி இருந்தாரேயானால், அந்த வழக்கில் அப்போதே விடுதலை பெற்றிருப்பார் என இந்நூலில் சங்கர் குறிப்பிட்டுள்ளது உற்றுநோக்கத்தக்கது.

காவல் துறையில் நிலவும் லஞ்சம், ஊழல், அத்துமீறல்கள் என நிறைய கேள்விப்பட்டிருந்தாலும் அத்துறையில் பணியாற்றிய ஒருவர் கூறும்போது அதற்கு மேலும் உரம் சேர்க்கிறது.

உண்மையைப் பேசுவது, நேர்மையாக இருப்பது என்பதைவிட பதவியைக் காப்பாற்றுவதே முக்கியம் என்று அதிகாரிகள் எண்ணி, அதற்கேற்ப செயல்பட்டதையும் குறிப்பாக ஒருவகையில் தமிழகத்தின் அதிகார வர்க்கத்தை ஜெயலலிதா திருத்த முடியாத அளவிற்குச் சீரழித்தார் என்றும் குறிப்பிட்டுள்ளதையும் நம்மால் எளிதாகக் கடக்க முடியவில்லை.

சாதி மறுப்புக் கொள்கையைப் பேசி வந்த தி.மு.க., அ.தி.மு.க கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் சாதி வெறி பிடித்தவர்களாக பல அமைச்சர்கள் வலம் வந்ததை ஆதாரங்களுடன் நூலாசிரியர் அம்பலப்படுத்தியுள்ளார்.

உயர் அதிகாரிகளின் பிள்ளைகள் மட்டுமல்லாமல் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் முதல்வர் கோட்டா என்ற போர்வையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டதைப் போட்டுடைத்த சங்கர், அத்தகைய மாணவர்கள் மிகக் குறைவாக மதிப்பெண்களைப் பெற்றவர்கள் என்பதையும் சேர்த்துச் சொல்லி சினமூட்டுகிறார்.

"அதிமுக ஆட்சியில் ஜெயலலிதாவுக்குச் சாதகமாக வழக்குகளை முடித்து, அவர் ஒதுக்கிய படி தங்கள் பிள்ளைகளுக்கு அண்ணா பல்கலைக் கழகத்தில் சீட் பெற்ற இரு அதிகாரிகளுக்கு ஆதரவாக, திமுக ஆட்சியில் அதிகாரிகள் நடந்து கொள்வது எனக்கு ஒரு முக்கியமான விசயத்தை உணர்த்தியது. அரசியல்வாதிகளைவிட மிக ஆபத்தானவர்கள் அதிகாரிகள் என்பதையே அது உணர்த்தியது".

இது சுடும் உண்மைதானே...

ஒட்டுக் கேட்பு விவகாரத்தில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் எப்படியெல்லாம் அதிகார துஷ்பிரயோகம் செய்தனர் என்பதைச் சான்றுகளுடன் ஊடகங்களுக்குக் கசியவிட்ட அரசு ஊழியரான சங்கர், பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவதைப் போல் காவல் துறையால் வியூகம் வகுத்து சுற்றி வளைக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டு சித்ரவதைக்குள்ளானது இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர் நடத்தை விதிகளைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தும் துணிந்துதான் காரியத்தில் இறங்கியுள்ளார் சங்கர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலந்தொட்டு மாறாமல் கடைப்பிடித்து வரும் விசாரணைக் கொடுமைகள், சிறை சித்ரவதைகள் யாவும் அனுபவ வெளிச்சத்தில் இந்நூலாசிரியரால் விவரிக்கப்பட்டுள்ளன.

சிறை அனுபவங்களூடே 1999ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சென்னை மத்திய சிறையில் ரவுடி பாக்சர் வடிவேலு இறந்ததைத் தொடர்ந்து நிகழ்ந்த பெருங்கலவரமும், அதன் விளைவாக நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் இறந்ததும், அதையொட்டி சென்னை மாநகரின் மையப் பகுதியிலிருந்த மத்திய சிறைச்சாலை, புழலுக்கு இடம் பெயர்ந்ததையும் இந்நூலில் விவரித்துள்ளார் நூலாசிரியர்.

பிரிட்டிஷ் காலத்திலிருந்து சிறைகளில் மாறாமல் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகளாக சில குறிப்பிட்ட நாளிதழ் மற்றும் வார இதழ்கள் மட்டுமே அனுமதிப்பது, சிறை மற்றும் கைதிகள் தொடர்பான செய்திகளை தார் பூசி அழிப்பது, போன்றவை தொடர்வதை அறிய முடிகிறது.


அரசு ஊழியர்களை விசாரணை இன்றி வேலைநீக்கம் செய்ய வழிவகுக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளைத் (311 2 ஏ, பி, சி) தகர்க்க அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனமும், அதனுடன் இணைந்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் இடையறாமல் போராடி வருகிறது. இச்சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தி சாலமன் எனும் அரசு ஊழியரைப் பணிநீக்கம் செய்ததையும் பின்னாட்களில் சென்னை உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கில்

பணிநீக்க ஆணை ரத்து செய்யப்பட்டதையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார் சங்கர்.

இறுதியில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற சங்கரின் வழக்கு முடிவுக்கு வந்து விடுதலை செய்யப் பட்டதும் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் சங்கர்...

"14 ஏப்ரல் 2008 முதல் எனக்கு நேர்ந்த அனுபவங்கள் பிரத்தியேகமானவை. வேறு யாரும் அனுபவித்திருக்க முடியாதவை. இந்த அனுபவங்கள் என்னைப் பக்குவப்படுத்தியிருக்கின்றன. என் அறிவை விசாலமாக்கியிருக்கின்றன. ஏதோ ஒரு உருப்படியான காரியத்தைச் செய்திருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றன. பின்னோக்கித் திரும்பிப் பார்த்தால், ஒரு தனி மனிதனாக அரசு இயந்திரத்தை அசைத்துப் பார்த்திருக்கிறேன் என்று தெரிகிறது".

ஓர் அரசு ஊழியர் ஊழலுக்கு எதிராக உளவு பார்த்து ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்து அதனால் அதிகார வர்க்கம் மூலம் சிறைப் பிடிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாகி, திரைப் படக் காட்சிகளைப் போல் நகர்ந்து இறுதியில் அது தொடர்பான வழக்கில் வென்று திரும்பியிருப்பது சாதாரண நிகழ்வல்ல... ஆயினும் தனிநபராக இல்லாமல் அமைப்பு மூலமாக எதிர் கொண்டிருந்தால் இன்னும் அழுத்தம் கிடைத்து, மேலும் பலப்பல ஊழல்கள் வெளி வந்திருக்கும். சங்கருக்கும் அமைப்பு கேடயமாகியிருக்கும். எது எவ்வாறாயினும் சவுக்கு சங்கரின் துணிவு, பொதுநோக்கு, நம்பிக்கை பாராட்டத்தக்கது. அழகிய முறையில் நூலை வெளிக் கொணர்ந்த நூலாசிரியருக்கும், கிழக்கு பதிப்பகத்திற்கும் பூங்கொத்துகள்...




கிழக்கு பதிப்பகம்..பக்கம் 223
விலை..ரூ.200

❖

## அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை நமுனா (18ஆம்) பாடப் பிரிவு

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | சென்னை-5 |
| வெளியிடும் காலம் | : | மாத இதழ் |
| அச்சிடுபவர் | : | மு.அன்பரசு |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ் எண். 19/1 & 21/2 கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை - 600 002 |
| வெளியிடுபவர் | : | மு.அன்பரசு |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஆசிரியர் | : | மு.சுப்பிரமணியன் |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஒரு சதவீதத்துக்கு மேல் பங்குத்தொகை அளித்துள்ளவர்கள் | | தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |

மு.அன்பரசு என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை **மு.அன்பரசு**
1.3.2018 வெளியிடுபவர்

# இருக்கும் வரை இரத்ததானம் செய்வோம் இறந்த பின் உடல் தானம் செய்வோம்

# சர்வதேச மகளிர் தினம் விழா நாளா? பெற்ற உரிமைகளை மீட்டெடுக்கும் நாளா?

**1789**ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டின் பாரீஸ், வெர்செயில்ஸ் நகரங்களில் பெண்கள் "சுதந்திரம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற பெரும் முழக்கத்துடன், எட்டு மணி நேர வேலை, வேலைக்கேற்ற ஊதியம், வாக்குரிமை, அடிமைத் தனத்திலிருந்து விடுதலை" என்ற கோரிக்கைகளுடன் வீதியில் இறங்கிப் போராடினர். இந்தப் போராட்டத்தை அடக்க முயன்ற லூயி மன்னரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆனால், இப்போராட்டத் தீ பல நாடுகளிலும் மூண்டெழுந்தது

குறிப்பாக, அமெரிக்கா, இத்தாலி, ரஷ்யா, கிரீஸ், டென்மார்க், ஆஸ்திரியா போன்ற நாடுகளுக்கும் இது பரவியது. 1840ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச அடிமை ஒழிப்பு மாநாடு, பெண் பிரதிநிதிகளை இணைத்துக் கொள்ளாததால், வெகுண்டெழுந்த பெண்ணுரிமைப் போராளிகள் நியூயார்க்கில் பெண்களின் உரிமைப் பிரகடனத்தை வெளியிட்டனர்.

நூற்பாலைகளில் மோசமான பணிச்சூழல், குறைவான ஊதியம், 16 மணி நேர வேலை என்ற நிலையை மாற்றிடக் கோரி 1857ஆம் ஆண்டு நியூயார்க்கில் மார்ச் 8ஆம் நாள் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டம் அரசு உதவியுடன் முதலாளிகளால் மிக மோசமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. பெண்கள் முடங்கி விடவில்லை. 1908ஆம் ஆண்டு 15,000 பெண்கள் கலந்து கொண்ட ஊர்வலம் பெண்களுக்கு சம ஊதியம், வாக்குரிமை என்ற கோரிக்கையை முன்னெடுத்தது. இது உலக முழுவதும் உள்ள பெண் போராளிகளை உயிர்த்தெழச் செய்தது.

1910ஆம் ஆண்டு ஆகஸ்டு 26, 27 தேதிகளில் கோபன்ஹேகனில் நடைபெற்ற உலக சோசலிஸ்ட் மாநாட்டில் ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பெண்ணுரிமைப் போராளி கிளாரா ஜெட்கின், பெண்கள் உரிமை மாநாட்டில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். உலகம் முழுவதிலுமிருந்து வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் இதனை ஆதரித்தனர். ஆனால், இத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. 1911 மார்ச் 19 அன்று ஜெர்மனி, டென்மார்க், ஆஸ்திரியா, ஸ்விட்சர்லாந்து நாடுகளில் முதன்முறையாக மகளிர் தினம் 10 லட்சத்திற்கும் அதிகமானோரால் கொண்டாடப்பட்டது.

2910ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவில் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடந்த பெண்கள் போராட்



டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ் சாண்டிரா, ஆண்டுதோறும் மார்ச் எட்டாம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்பட வேண்டுமென பிரகடனம் செய்தார். இதனையொட்டி, 1921ஆம் ஆண்டு முதல் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதியை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப் படுத்தியது. 1857ஆம் ஆண்டு நியூயார்க் நகரத் தெருக்களில் ஆண்களுக்கு இணையான சம ஊதியம், வாக்குரிமை கோரி பெரும் முழக்கம் எழுப்பிய நாளே இன்று வரை சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

2018ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினம் “மகளிரின் உரிமை வளர்ச்சிக்கு அழுத்தம்” என்ற கொள்கை முழக்கத்துடன் கொண்டாடப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.

தோழர்களே,

1857ஆம் ஆண்டிற்கு சற்றும் குறையாத சூழல் இன்று நிலவுகிறது. பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் கூட 8 மணி நேர வேலை உத்தர வாதப்படுத்திடப்படாத சூழல் நிலவுகிறது. பணம் கொழிக்கும் பன்னாட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஐ.டி. கம்பெனிகளில் ஆட்குறைப்பு பவுன்சர்களால் வெளியேற்றப்படுமளவுக்கு கர்ண கொடூரமாய் நடத்தப்படுகிறது. பஞ்சாலைத் தொழிலில் கோவை, ஈரோடு என பல மாவட்டங் களில் “சுமங்கலித் திட்டம்” என்ற பெயரில் உண்டு உறைவிடப் பள்ளி போல் ஆண்டு முழுவதும் அடைக்கப்பட்டு 16 மணி நேரத்திற்கும் மேலும் பணிபுரியக் கூடிய நிலை என்பது தொடர்கிறது.

உலக நாடுகள் பலவற்றில் உழைப்புச் சுரண்டல் தொடர்கிறது. “அமர்த்து துரத்து” என்ற அடிப்படையில் கொத்தடிமைத்தனம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. உலகமயம் காரணமாக எந்த நாட்டு சட்டத் திட்டமும் கேள்வி கேட்க முடியாத சூழலும், தொழிலாளர் நலச் சட்டங்கள் பார்வை யாளராய் போன நிலையும் உருவாகியிருக்கிறது. 33 ஆண்டுகளுக்கு மேலும் இளம் தளிர்களின் உடல்நலம் காப்பதற்காக ஊட்டச்சத்து வழங்கி வரும் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.18,000 வழங்கிடக் கோரி பெண்கள் போராட்டம் நடத்தும்போது, ஊதியம் வழங்கிட உரிய வழிமுறைகளை கண்டறியாத அரசுகள் பெண் காவலர்களைக் கொண்டு அவர்களை அடக்கிடும் நிலை தொடர் கிறது. இந்தியா முழுமைக்கும் உடலுழைப்புதாரர் களுக்காக 2005ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் 55 சதவீதத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் மகளிராய் இருக்கக் கூடிய அளவுக்கு இந்திய கிராமங்களில் வறுமையும், வேலையின்மையும் மகளிரை துரத்துகிறது. பாலியல் வன்கொடுமைகளுக்குள் ளான பெண்களுக்கு பாதுகாப்பு உத்திரவாதப் படுத்தாத நிலையே தொடர்கிறது. எனவே, தோழர்களே, “மகளிர் உரிமை வளர்ச்சிக்கு அழுத்தம்” தரும் 2018ஆம் ஆண்டு சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த தினத்தில்,

- அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவ சிந்தனையை மேலோங்கச் செய்வோம்.
- பன்னெடுங் காலமாய் பின்பற்றப்படும் பெண் அடக்குமுறையை தகர்ப்போம். கூட்டுப் புழுக்களைப் போல் அதனைத் தகர்த்து வெளிவரும் மகளிரை போற்றுவோம்.
- பெண்கள் மீது நல்லெண்ண பார்வையை உருவாக்குவோம்.
- இதர பலதரப்பட்ட மக்களிடம் பெண்களின் மீதான மூடநம்பிக்கையை அகற்றுவோம். அதை அகற்றி வெளிவரும் மகளிரின் செயல்தனைக் கொண்டாடுவோம்.
- மகளிரின் செயல்பாட்டை, பங்கேற்பை, சாதனைகளை பெரும் முழக்கத்துடன் கொண்டாடுவோம்.
- மீண்டும் மகளிர் சுதந்திரம், சம ஊதியம், எட்டு மணி நேர வேலை என்ற நமது பெண்ணுரிமைப் போராளிகள் போராடி பெற்ற உரிமைகளை பாதுகாத்திட முன்னெப்போதுமில்லாத அளவில் ஒற்றுமையோடு வீரியத்தோடு களமிறங்குவோம், கொண்டாடுவோம். மகளிரை அனைத்து நிலைகளிலும், அனைத்து இடங்களிலும், அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் வேரறுப்போம் அடிமைத் தளையை, பாலின பேதங்களை.
- பாலின சமநிலையே சர்வதேச மகளிர் தின கொண்டாட்டத்தின் உச்சமாயிருக்கட்டும் தோழர்களே!

- முனைவர் **சு.கிருஷ்ணன்**,
மதுரை

# அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

Affiliated to TUI (Public Services)

## 16ஆம் தேசிய மாநாடு

5-8, ஏப்ரல் 2018- சென்னை

**வரவேற்புக் குழு**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| டி.கே.ரங்கராஜன், M.P. | மு.அன்பரசு | எம்.தாங்கராஜ் |

### நிர்வாகக் குழு

**மாநிலத் தலைவர், TNGEA**

மு.சுப்பிரமணியன்

**மாநில துணைத் தலைவர்கள்**

ந.குமாரவேல்

ஆ.செல்வம்

எஸ்.தமிழ்ச்செல்வி

எஸ்.பார்த்திபன்

மொ.ஞானத்தம்பி

எம்.சுப்பிரமணியன்

**மாநிலச் செயலாளர்கள்**

இரா.பன்னீர்செல்வம்

சி.ஆர்.இராஜகுமார்

என்.ஜனார்த்தனன்

தி.கலைசெல்வி

எம்.சௌந்தரராஜன்

ஆ.பெரியசாமி

## அன்பு வேண்டுகோள்

அன்பிற்கினியவரே வணக்கம்,

நாடு முழுவதுமுள்ள 60 லட்சம் மாநில அரசு ஊழியர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு மட்டுமல்லாது, மத நல்லிணக்கம், ஒற்றுமையை பாதுகாப்பதிலும், தேச பொருளாதாரத்தை மேம்படுத்து வதிலும், இந்திய நாட்டின் தொழில்களும், வணிகமும் பாதுகாக்கப்படவும் அயராது குரல் கொடுத்து வரும் இந்திய நாட்டின் ஒரே மிகப்பெரிய அமைப்பான அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாட்டை 2018, ஏப்ரல் 5 முதல் 8 தேதிகளில் சென்னை மாதவரம், ராமலட்சுமி பாரடைஸில் நடத்தும் பெருமைக்குரிய அரிய வாய்ப்பு தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ளது.

தமிழக அரசு ஊழியரின் விடிவெள்ளியாகத் திகழும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பொறுப்பேற்று இம்மாநாட்டினை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை வரவேற்புக் குழு அமைத்து சிறப்புடன் செய்து வருகிறது. இம்மாநாட்டில் இந்தியா முழுவதிலுமிருந்து 1250க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். இம்மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கான உதவிகளை பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மனமுவந்து செய்து வருகிறார்கள்.

சிறப்பும் பெருமையும் வாய்ந்த தங்களுடைய சங்கத்தின்/அமைப்பின்/ நிறுவனத்தின் சார்பிலும் தாங்கள் மனமுவந்து உதவிகளை செய்து இம்மாநாட்டின் சிறப்பையும், பெருமையையும் உயர்த்திட வேண்டுமென விரும்புகிறோம்.

எனவே, இம்மாநாட்டிற்கு தங்களுடைய மனப்பூர்வமான உதவி என்கின்ற வகையில் பொருளுதவியோ அல்லது இதன் இணைப்பில் கண்டுள்ள ஏதேனும் வகையிலான உதவியை நல்கிட வேண்டுமென விரும்புகின்றோம்.

இந்த உதவியின் வாயிலாக தங்களுடைய அமைப்பின் பெயரும், புகழும் மென்மேலும் வளர்ந்திட வாய்ப்புள்ளது என்பதனையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெறுநர்

நன்மதிப்புடன்,

(மு.அன்பரசு)
வரவேற்புக் குழு செயலாளர்

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம் 46,தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
e-mail : aisgef16thconference@gmail.com போன்: 2844 1286,2844 0938

# அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

Affiliated to TUI (Public Services)

## 16ஆம் தேசிய மாநாடு

5-8, ஏப்ரல் 2018- சென்னை

**வரவேற்புக் குழு**

## வயிறார உண்டு, கண்ணாறக் கண்டு, வந்தோர்கள் நெஞ்சார வாழ்த்த,

## நாம் செய்வோம் விருந்தோம்பல் தொண்டு!

அன்பிற்கினியோரே,

வீர வணக்கங்களும், தோழமை வாழ்த்துக்களும்!

நமக்கு ஒரு நல்ல தருணம் வாய்த்திருக்கிறது. நாம் நம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்களைப்பற்றி அளவீடு செய்ய வேண்டிய தருணம்தான் இது. ஆட்சியாளர்கள், மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்களின் சிந்தனைப் போக்கு சிறிதளவும் மாறவில்லை என்பதற்கான சாட்சிகள் தான் இன்றைய இந்தியாவின் காட்சிகள். ஒருபுறம் உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி கூலி ரூ.600/- (அதாவது குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.18000/-)ஆக நிர்ணயிக்க வேண்டும், பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத்துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்றெல்லாம் பல்வேறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பலவர்க்கப் பிரிவினரும் போராடிக்கொண்டிருக்க, மக்கள் மூலம் அதிகாரத்தை பெற்றுள்ள ஆட்சியாளர்களோ தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்கி சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். உச்சமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு மாதம் ரூ.2.50 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி வழங்கி அதை 2016 ஜனவரி 1 முதல் முன்தேதியிட்ட வழங்கிட உத்தரவிடுகின்றனர். கஜானாவில் பணமில்லை என்பவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு 100 சதவீதம் ஊதியத்தை உயர்த்துகிறார்கள். தமிழகத்தில் அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதியமாற்றத்திலும் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமலும், பழைய ஓய்வூதியத்தையும் தடுத்துள்ளனர். விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள், மின்வாரிய ஊழியர்கள், மாணவர்கள் என அனைத்து பிரிவினரும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில்தான் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆம் தேசிய மாநாடு சென்னையில் நடைபெறவிருக்கிறது. இது சங்க மற்றும் சமூக ஈடுபாடு உள்ள எந்த ஊழியருக்கும் ஊக்கமளிக்கும் செய்தியே. தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன், இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 60 லட்சம் ஊழியர்களின் பிரதிநிதித்துவம் கொண்ட அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் தமிழ்நாட்டில் ஒரு தேசிய மாநாட்டை நடத்துகிறது என்றால் அது எத்தகையதொரு பிரம்மாண்டமான நிகழ்வாக இருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

உலக தொழிற்சங்க கூட்டமைப்பின் (WFTU) முதன்மையாக செயல்படும் சர்வதேச தொழிற்சங்கத்தின் (TUI)ஒரு அங்கமாக இயங்கும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF)இந்த 16ஆம் தேசிய மாநாட்டில் இந்தியாவிலுள்ள 30 மாநிலங்களிலிருந்து சுமார் 1250 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள் என்பது மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிற்சங்கத்

தலைவர்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்ட பார்வையாளர்கள் தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, கிரீஸ், நேபாள் போன்ற நாடுகளிலிருந்து இந்த தேசிய மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார்கள் என்பதும் அனைத்துத்துறை அரசு ஊழியர்களுக்கும் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

பல்வேறு மாநிலங்களிலிருந்தும் முதல்வர்கள். பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மத்திய மாநில அரசு, பொதுத்துறை, வங்கித்துறை. காப்பீட்டுத்துறை, இரயில்வே, ஆசிரியர்கள் அமைப்பு மற்றும் டெலிகாம் நிறுவனத்தின் சார்பில் அதன் தொழிற்சங்க தலைவர்கள் இம்மாநாட்டை வாழ்த்திப்பேச உள்ளார்கள். அரசுத்துறை ஊழியர்கள் மற்றும் நாட்டு பொதுநலன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளை இந்த மாநாடு அலசி ஆராய்ந்து அடுத்த கட்ட நகர்வுகளை அறிவிக்க உள்ளது. சென்னை, மாதவரத்தில் உள்ள ராம லட்சுமி பாரடைஸில் 05-04-2018 முதல் 08-04-2018 வரை நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் விருந்தோம்பலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஏற்றுக்கொண்டு சுகாதாரமான உணவு, தூய்மையான குடிநீர், வருகின்ற விருந்தினர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் சிக்கலில்லாத போக்குவரத்து ஏற்பாடு போன்றவற்றை ஏற்பாடு செய்து தரும் பொறுப்பை ஏற்றுள்ளது.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வரும் தொழிற்சங்க பார்வையாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கும், வெளிநாடுகளிலிருந்து மாநாட்டு நிகழ்வுகளை பார்வையிட வரும் விருந்தினர்களுக்கும் தமிழர் கலாச்சாரத்தின் மண் மணம் மாறாத விருந்தோம்பலை வழங்கி பெருமை படுத்த வேண்டியது நமது தலையாய கடமையாகும். தமிழகத்தில் உள்ள அனைத்து துறை ஊழியர் சங்கங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் இந்த வரவேற்பும் விருந்தோம்பலும் பார்வையாளர்களையும் பங்கேற்பாளர்களையும் மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பது நமது எண்ணமாகும். நான்கு நாள் மாநாட்டில் ஒரு வேளைக்கு குறைந்தபட்சம் 1500 பேர் வீதம் தேநீர், சிற்றுண்டி, மதிய உணவு, மாலை மகிழுண்டி, தேநீர், இரவு சிற்றுண்டி போன்றவைகளை சிறப்புற செய்து தர வேண்டியுள்ளது.

அரசு ஊழியர்கள் நலன் மட்டுமல்லாது சமுதாய நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் இந்த நான்குநாள் மாநாட்டின் விருந்தோம்பல் செலவினங்களுக்கு ஆகும் தொகைகளை தோழமை சங்கங்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப ஏற்றுக்கொண்டு, ''தமிழகத்தில் நடந்த மாநாடு அனைத்து அரசுத்துறை சங்கங்களின் பங்களிப்புடன் சிறப்புற நடந்தது'' எனும் பெயரை ஏற்படுத்தி தர வேண்டும்.

எனவே தோழமைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் மாநாட்டின் விருந்தோம்பல் நிகழ்வுகளில் உணவுக்காக வரையறை செய்யப்பட்டுள்ள நிதிகளில் ஏதேனும் ஒன்றுக்கான பொறுப்பை தாங்களோ அல்லது தங்களுக்கு தெரிந்த நிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெறுவதன் மூலமாகவோ அளிக்கக் கேட்டுக் கொள்கிறோம். மாநாட்டுக்கு வந்தவர்கள் வயிறார உண்டு, கண்ணாறக் கண்டு, காதாறக் கேட்டு, வாயாற நம்முடைய சேவையை பாராட்டிச் செல்லும் காட்சியே 16ஆம் தேசிய மாநாட்டை நாம் பொறுப்பேற்று நடத்தியதற்கு சான்றாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு செலவை நீங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொண்டு அதற்கான உறுதியை அளிப்பீர்கள் என்று நம்புகிறோம். நிதி உதவி அளித்தவர்கள் / அமைப்புகள் / நிறுவனத்தின் பெயர்கள் மாநாட்டு மலரில் இடம்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உணவு செலவுக்கான பட்டியல் (ஒரு வேளைக்கு)

| | |
|---|---|
| காலை தேநீர் | ரூ. 24,000 |
| காலை சிற்றுண்டி | ரூ.1,80,000 |
| நண்பகல் தேநீர் + பிஸ்கட் | ரூ. 24,000 |
| மதிய உணவு | ரூ.3,00,000 |
| மாலை தேநீர் + ஸ்நாக்ஸ் | ரூ. 60,000 |
| இரவு சிற்றுண்டி | ரூ.2,40,000 |

தோழமை விழையும்

(மு.அன்பரசு)

வரவேற்புக் குழு செயலாளர்

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம் 46,தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
e-mail : aisgef16thconference@gmail.com போன்: 2844 1286,2844 0938

# அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

Affiliated to TUI (Public Services)

## 16ஆம் தேசிய மாநாடு

5-8, ஏப்ரல் 2018- சென்னை

**வரவேற்புக் குழு**

## மணம் கமழும் தேசிய மாநாட்டு சிறப்பு மலருக்கு அணி சேர்க்கட்டும் தோழமைச் சங்க விளம்பரங்கள்!

அன்பிற்கினியவரே,

வீரஞ்செறிந்த வணக்கங்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்! மட்டற்ற மகிழ்ச்சியில் இந்தியா முழுவதிலுமுள்ள அரசு ஊழியர்கள் திளைத்திருக்கிறார்கள். அதிலும் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்களுக்கு இந்த மாநாடு சென்னையில் நடைபெறவிருக்கிறது என்றால் சங்க ஈடுபாடு உள்ள எந்தவொரு ஊழியருக்கும் அது ஊக்கமளிக்கும் செய்தியே. தமிழகத்தில் அரசுத் துறைகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன், இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் 60 லட்சம் ஊழியர்களின் பிரதிநிதித்துவம் கொண்ட அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், தமிழ்நாட்டில் ஒரு தேசிய மாநாட்டை நடத்துகிறது என்றால் அது எந்தகையதொரு பிரம்மாண்டமான நிகழ்வாக இருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

உலக தொழிற்சங்க கூட்டமைப்பின் (**WFTU**) முக்கிய கரமாக செயல்படும் சர்வதேச தொழிற்சங்கத்தின் (**TUI**) ஒரு அங்கமாக இயங்கும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (**AISGEF**) இந்த 16ஆம் தேசிய மாநாட்டில் இந்தியாவிலுள்ள 30 மாநிலங்களிலிருந்து சுமார் 1250 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். மேலும் பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்ட பார்வையாளர்கள் தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, கிரீஸ், நேபாளம் போன்ற நாடுகளிலிருந்தும் இந்த தேசிய மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார்கள் என்பது அனைத்துத் துறை அரசு ஊழியர்களுக்கும் பெருமை சேர்க்கும் விஷயமாகும்.

மாநில அரசு ஊழியர்கள் சந்தித்துவரும் பிரச்னைகள், காலிப் பணியிடங்கள் நிரப்பாமல் விடப்பட்டுள்ளதால் மிகுந்த வேலைப் பளுவில் உழன்று கொண்டிருக்கும் ஊழியர்கள், வேலை இல்லாத் திண்டாட்டம், ஊதிய முரண்பாடுகளை களைய முன்வராமை, ஊதிய மாற்ற நிலுவைத்தொகை மறுப்பு மற்றும் பொதுநலன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை இந்த 4 நாள் மாநாடு அலசி ஆராய்ந்து அடுத்த கட்ட நகர்வுகளை அறிவிக்க உள்ளது. இந்த மாநாட்டின் விருந்தோம்பலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஏற்றுக்கொண்டு சுகாதாரமான உணவு, தூய்மையான குடிநீர், வருகின்ற விருந்தினர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் சிக்கலில்லாத போக்குவரத்து ஏற்பாடு போன்றவற்றை ஏற்பாடு செய்து தரத் தயாராக உள்ளது.

இம்மாநாட்டின் பசுமையான நினைவுகளை பகிர்ந்து கொள்ளவும், பதிவுகளை மேற்கொள்ளவும் மாநாட்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிட வரவேற்புக்குழு முடிவு செய்துள்ளது. இந்த சிறப்பு மலர் இந்தியாவில் மட்டுமல்ல இந்தியாவின் எல்லை கடந்து இவ்வுலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்று மணம் பரப்ப உள்ளது.

எனவே இந்த மலருக்கு உங்கள் ஆதரவை தெரிவிக்கும் வகையில் உங்கள் விளம்பரங்களையும் கட்டுரைகளையும் கொடுத்து சிறப்பு மலர் சீரும் சிறப்புமாக வெளிவர உதவிட அனைத்து தோழமை உள்ளங்களையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாகவும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பாகவும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம். விளம்பரங்கள் கொடுக்க விரும்புவோர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள விவரங்களின் அடிப்படையில் விளம்பரங்கள் அளிக்கலாம். விளம்பரத்திற்கான தொகையை காசோலை அல்லது வங்கி வரைவு மூலமாக "**AISGEF NATIONAL CONFERENCE RECEPTION COMMITTEE** " என்ற பெயருக்கு சென்னையில் பணம் மாற்றத்தக்க வகையில் (Payable at Chennai) உங்கள் விளம்பரத்துடன் அனுப்பி வைத்து மாநாட்டு சிறப்பு மலர், ஊழியர்களின் பாதுகாப்பு பெட்டகமாக ஒளிர உதவிட கேட்டுக்கொள்கிறோம்.

நன்றிகள் நவிலும்

(மு.அன்பரசு)

வரவேற்புக் குழு செயலாளர்

# ALL INDIA
# STATE GOVERNMENT EMPLOYEES FEDERATION

Affiliated to TUI (Public Services)

## 16th National Conference
**5-8, April, 2018 - Chennai**

## Souvenir Committee

## APPEAL FOR ADVERTISEMENT

Respected Sir / Madam

Greetings. We are delighted to inform that the ALL INDIA STATE GOVERNMENT EMPLOYEES FEDERATION's [AISGEF] 16th National Conference is going to takes place at ***"Ram Lakshmi Paradise"*** Madhavaram, Chennai at the ageis of Tamil Nadu State Government Employees Association from 5th to 8th of April, 2018. The AISGEF is representing the interests of more than 60 lakh employees across the Country who are employed in State Government departments. Further we are affiliated to the "Trade Union International" at the International level which is an arm of World Federation of Trade Unions [WFTU]. In this Conference, around 1250 Delegates from 25 States are attending. Besides leaders and observers from Countries like South Africa, Australia, Srilanka, Greece, Nepal, etc. are also expected to attend this National Conference.

This Conference will be greeted by Chief Ministers of various states; Members of Parliament, Members Legislative Assemblies of various states and Trade Union Leaders from State Governments, Cenrtral Government, Public Sectors, Banking, Insurance, Railways, Teachers Organisations, Telecom etc.,

This National Conference, which is going to deliberate issues concerning the State GovernmentEmployees, filling up of all vacancies, unemployment problem and the issues of public importance, is scheduled for 4 days for which hygenic Food, decent accommodation, hassle free transportation are to be provided by TNGEA as host.

In Commemoration of the event, we propose to bring out a Special Souvenir, which will be widely distributed not only in Tamil Nadu but also all over India and to a few Countries beyond the boundries of this Country. Your Advertisement / Greetings message appear in this Souvenir will have the attention and attraction across the Country and even beyond it.

Therefore, We solicit your patronage and place order for the advertisement for which tariff details are enclosed herewith. Kindly favour us by Cheque/DD drawn in the name of "AISGEF National Conference Reception Committee" , Chennai along with your advertisement both in hard copy and in digital format.

Thanking you

(M. Anbarasu)
Secretary Reception Committee

# 46, Car Street, Triplicane, Chennai - 600 005 *e-mail : aisgef16thconference@gmail.com* ☎ **044-28441286, 28440938**

# ORDER FORM

Dear Sir,

Sub.: Request for Advertisement / Greetings in the Souvenir of AISGEF 16th National Conference at Chennai. Advertisement matter in Digital Format enclosed.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Front Inner | ☐ | Back Cover | ☐ | Back Inner | ☐ |
| Full Page M/C | ☐ | Half Page M/C | ☐ | 1/4 Page M/C | ☐ |
| Full Page S/C | ☐ | Half Page S/C | ☐ | 1/4 Page S/C | ☐ |

I / We am/are paying Rs...................... by cash / Cheque / DD bearing No. .................. dated............ drawn on ............................................ in favour of "AISGEF National Conference Reception Committee", Chennai for publishing our Advertisement in the Souvenir to be brought out in commemoration of AISGEF 16th National Conference.

Special Instructions if any :

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

Thanking You

(Authorised Signatory) Seal :

## TARIFF FOR ADVERTISEMENT IN OUR SOUVENIR

| | | |
|---|---|---|
| Back Cover Page - | Multi Colour | : **Rs. 25,000/-** |
| Front Inside Cover - | Multi Colour | : **Rs. 20,000/-** |
| Back Inside Cover - | Multi Colour | : **Rs. 20,000/-** |
| Full Page - | Multi Colour | : **Rs. 15,000/-** |
| Full Page - | Single Colour | : **Rs. 10,000/-** |
| Half Page - | Multi Colour | : **Rs. 7,500/-** |
| Half Page - | Single Colour | : **Rs. 5,000/-** |
| Quarter Page - | Multi Colour | : **Rs. 4,000/-** |
| Quarter Page - | Single Colour | : **Rs. 2,750/-** |

I / We am / are making the payment of Rs. ................(Rupees...........................................................)

by cash / Cheque / DD No...................... Dated........./........./2018 Drawn on ...................in favour of

"AISGEF National Conference Reception Committee" towards...........................................................

Name....................................................................

Address :.............................................................. Sig: ..................................................................


# மார்க்ஸின் இரு கண்களாய்...

"**அ**றிவை ஆழமாக்கு
அன்பை உயரமாக்கு
வெற்றி என்பது நிழல்
நீ வெளிச்சத்தை நோக்கி நட
அது தொடரும் உன்னை"

உண்மைதான். தனது அறிவியல் அறிவை.. அரசியல் அறிவை.. பொருளியல் அறிவை ஆழமாக்க தொடர்ந்து உழைத்தார் காரல் மார்க்ஸ். உழைக்கும் மக்களின்.. தொழிலாளி வர்க்கத்தின் விடியலுக்காக சமூக, அரசியல், பொருளாதார அறிவை ஆழமாக்கினார். அதற்காக வாழ்க்கையின் பெரும் பகுதியைப் படித்தும், எழுதியும் வெளிச்சத்தை நோக்கி நடந்தார். அதன் பயனாக வெற்றியும் கண்டார். ஆயிரம் ஆண்டுகளில் மிகச் சிறந்த சிந்தனையாளராக இலண்டன் பி.பி.சி. காரல் மார்க்ஸை தேர்வு செய்தது.

காரல் மார்க்ஸ் மனிதகுல விடுதலைக்கான தத்துவத்தைப் படைத்தது வறட்டுத்தனமானதன்று. அது அறிவியல்பூர்வமானது. அழகியலுடனான இலக்கியப்பூர்வமானது. இதற்கு இரு கண்களாக ஜென்னியும், எங்கெல்ஸும் அமைந்தனர் எனின் மிகையன்று.

உயிருக்குயிராய் நேசித்த காதலியும், மனைவியுமான ஜென்னியிடம் அளவுகடந்த அன்பு செலுத்தினார். ஜென்னி அவருடைய மனைவியாக மட்டுமல்லாமல் நெருங்கிய நண்பராகவும், ஆலோசகராகவும், அவருடைய நூல்களின் விமர்சகராகவும் விளங்கினார். காரல் மார்க்ஸ் ஜென்னியின் இலக்கியத் திறனை வியந்து போற்றியுள்ளார். ஜென்னி கடிதம் எழுதும் கலையில் ஒப்பற்ற திறமை உடையவர் என்று கருதினார். அது உண்மையென்பதை ஜென்னியின் கடித இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.



ஒருமுறை மார்க்ஸின் எழுத்து நடையை விமர்சித்து ஜென்னி எழுதிய கடிதம் இன்றும் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதில் அவர் மார்க்ஸுக்கு அறிவுரை கூறுகிறார்..

"மிகவும் அதிகமான வெறுப்புடனும், எரிச்சலுடனும் எழுதாதீர்கள். உங்களுடைய மற்ற கட்டுரைகள் எவ்வளவு அதிகமான விளைவை ஏற்படுத்தின என்பது உங்களுக்குத் தெரியும். எதார்த்தமான முறையில் நயத்துடனும், நகைச்சுவையுடனும், இலேசாகவும் எழுதுங்கள். அன்பே! உங்கள் பேனாவைக் காகிதத்தின் மீது ஓடவிடுங்கள், சில சமயங்களில் தடுக்கி விழுந்து விடுமானால், அதோடு சேர்ந்து வாக்கியமும் சிதைவடைந்தாலும் கவலை வேண்டாம். உங்கள் சிந்தனைகள் பழைய காலத்துப் படைவீரர்களைப் போல அதிகமான உறுதியுடனும் துணிவுடனும் விறைப்பாக நிற்கின்றன............."

குடும்பத் துன்பங்களின் சுமைகள் எப்படி இருந்த போதிலும் மார்க்ஸின் அறிவியல் மற்றும் அரசியல் பணியில் ஜென்னி சோர்வடையாமல் உதவி செய்தார். பல்லாண்டு காலம் ஜென்னியே மார்க்ஸின் செயலாளர் பொறுப்பில் பணியாற்றி

னார். அவருடைய நூல்களைப் பிரதியெடுத்தார். கட்சிப் பணிகளில் மார்க்ஸின் செய்தி அறிவிப்பாளராக இருந்தார். ஜென்னி தன்னைக் கட்சியின் ஊழியர் என்று பெருமையாகக் கருதினார்.

மார்க்ஸின் குடும்பம் வறுமையில் தத்தளித்தது. எனினும் அரசியல் அகதிகளுக்கு அவர் குடும்பத்தில் இடமும், உணவும், ஆறுதலும் தவறாமல் கிடைக்கும். மார்க்ஸைக் காட்டிலும் ஜென்னி இவ்விசயத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார். அதை வில்ஹெல்ம் லீப்ட்னெஹ்ட் இவ்வாறு கூறியுள்ளார்... "எனக்குத் தாயாக, நண்பராக, துணைவராக, ஆலோசகராக இருந்தார்கள்; பெண்ணைப் பற்றிய இலட்சிய வடிவமாக இருந்தார்கள்...."

மிக அடக்கமான அரசியல்வாதிகள்கூட ஜென்னியைப் பற்றிப் பேசுகின்றபொழுது கவிஞர்களாக மாறினார்கள். தன் கணவர் சம்மந்தப்பட்ட ஒவ்வொன்றுமே மற்றவர்களைக் காட்டிலும் ஜென்னியைத்தான் அதிகமாகப் பாதித்தது. ஜெர்மனியின் பிற்போக்குப் பத்திரிகைகள் 1848ஆம் ஆண்டுப் புரட்சிக்காரர்களைப் பற்றி அவதூறு செய்தபொழுது, விஷத்தில் தோய்க்கப்பட்ட அம்புகள் மார்க்ஸைக் குறி பார்த்துத் தொடுக்கப்பட்ட பொழுது ஜென்னியே மிகவும் பாதிக்கப்பட்டார். நோயில் விழுந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க மூலதனத்தின் முதல் தொகுதி வெளியிடப்பட்ட பிறகு சகாப்தம் நிறைந்த இந்நூலை ஜெர்மானியர்கள் முற்றிலும் புறக்கணித்துவிட்டார்களே என்று ஜென்னி மிகவும் வருந்தினார்.

இருபதாம் நூற்றாண்டில் மார்க்சியம் வென்று உலகின் மூன்றிலொரு பகுதி சோஷலிச பூமியாகத் திகழ்ந்தது வரலாறு.

மனிதகுல விடுதலைக்கு மார்க்சியமே தீர்வு என வாடிகன் போப் ஜான்பால் கூறியது நினைவுகூறத் தக்கது. இன்று உலகப் புகழ் வாய்ந்த தத்துவவாதியாக மார்க்ஸ் மிளிர்கிறார். ஆனால் அவர் உயிருடன் இருந்த கால கட்டங்களில் சந்தித்தது வறுமையும் வேதனையும்தான்.

சுருங்கச் சொல்வதெனில் குழந்தை பிறக்கும் போது தொட்டில் வாங்கவும் பணமில்லை. குழந்தை இறக்கும்போது சவப்பெட்டி வாங்கவும் பணமில்லை. இந்நிலையில் பெரும் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த ஜென்னி, காரல் மார்க்ஸின் மீது கொண்டிருந்த அன்பு ஒன்றுக்காகவே காலம் முழுவதும் வறுமையை அனுபவித்தார். ஒட்டுமொத்த மனிதகுல வறுமையகற்ற மார்க்கம் காணும் பணியில் இருவரும் சேர்ந்தே பயணித்து வெற்றி கண்டனர்.

மனித குலம் காதலைப் பற்றி பல கதைகளையும் காவியங்களையும் படைத்திருக்கிறது. அவற்றுள் மார்க்ஸ் ஜென்னி காதல் கதை உண்மையானது. மேன்மையானது 1881ஆம் ஆண்டின் இறுதியில் ஜென்னி மரணமடைந்த பொழுது "இனி மூரும் (மார்க்ஸும்) இறந்துவிட்டார்" என்று கூறினார் எங்கெல்ஸ். இதைக் கேட்ட மற்றவர்கள் திகைப்படைந்தனர். மார்க்ஸும், ஜென்னியும் ஒருவர் இல்லாமல் மற்றொருவர் மெய்யாகவே வாழமுடியாது. மார்க்ஸ் இனிமேல் உயிர் தரிக்கமாட்டார் என்பதை எங்கெல்ஸ் நன்றாக அறிந்திருந்தார். அவர் கூறியபடியே நடந்தது.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தது மார்க்ஸ் எங்கெல்ஸ் நட்பு. ஒருவரின்றி இன்னொருவர் இல்லை எனுமளவில் உணர்வுப் பூர்வமான நட்பில் திளைத்தனர் இருவரும். மார்க்சின் மூலதனம் உள்ளிட்ட நூல்கள் எங்கெல்ஸ் இல்லாமல் வெளியிட்டிருக்க வாய்ப்பேயில்லை.

"நான் மார்க்ஸையும், எங்கெல்ஸையும் இன்னும் நேசிக்கிறேன். அவர்களைத் திட்டுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. இல்லை, அவர்கள் உண்மையான மனிதர்கள்! நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையை நாம் விட்டுவிடக்கூடாது". இது லெனின் கூற்று.

காரல் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் முதல் சந்திப்பு 1842 நவம்பரில் கொலோனில் நடைபெற்றது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் பாரிசில் மீண்டும் சந்தித்தபோது தாங்களிருவரும் சமூக வளர்ச்சியைப் பற்றி அடிப்படையில் ஒரே மாதிரியான கருத்துகளுக்கு வெவ்வேறு பாதைகளின் மூலமாக வந்திருப்பதைக் கண்டனர். அது அவர்களுக்கு அதிகமான மகிழ்ச்சியைக் கொடுத்தது. மார்க்சியம் ஒரு மனிதருடைய பெயரைத் தாங்கியிருந்தாலும்,

அது உண்மையில் இரண்டு மனிதர்களின் பிரிக்க முடியாத பணியாகும். மார்க்ஸ் ஒருமுறை எங்கெல்ஸைத் தன்னுடைய 'இரண்டாவது நான்' என்று அறிமுகம் செய்தார்.

எங்கெல்ஸ் மார்க்ஸைக் காட்டிலும் இரண்டு வயது இளையவர் என்றாலும் அவரைக் காட்டிலும் முன்பே பத்திரிகைகளில் கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதத் தொடங்கினார். அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு உருவரைகள் என்ற தலைப்பில் எங்கெல்ஸ் எழுதிய கட்டுரை 1844-ல் வெளியாயிற்று. எங்கெல்ஸுக்கு அப்பொழுது 24 வயதே ஆகியிருந்தது. மார்க்ஸ் மூலதனத்தில் இக்கட்டுரையை அடிக்கடி மேற்கோள் காட்டுகிறார்.

இதற்கு ஓராண்டுக்குப் பின்பு இங்கிலாந்தில் 'தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை' என்ற நூலை ஏங்கெல்ஸ் வெளியிட்டார். மார்க்ஸும், லெனினும் இந்நூலை உயர்வாகக் கருதினர்.

மார்க்ஸ் குடும்பம் இங்கிலாந்தில் வாழ்க்கை நடத்துவதற்கு எந்த வழியும் இல்லாமலிருந்தபடியால் எங்கெல்ஸ் அவர்களுக்கு உதவி செய்ய விரும்பினார். எனவே மான்செஸ்டரில் அவருடைய தகப்பனார் பங்குதாரராக இருந்த நெசவாலையில் எழுத்தராக வேலை செய்தார். இக்காலகட்டத்தில் மார்க்ஸுக்கு, எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களுடன், காசோலையையும் சேர்த்தே அனுப்பினார். மார்க்ஸ் தன்னுடைய லண்டன் வாழ்க்கை காலகட்டத்தில் ஏங்கெல்ஸைக் கலந்து கொள்ளாமல் எச்செயலையும் செய்ததில்லை. இருவரும் இணைந்து புனிதக் குடும்பம், ஜெர்மன் சித்தாந்தம் ஆகிய நூல்களைக் கூட்டாக எழுதினர். 1848ஆம் ஆண்டு மார்க்ஸும் எங்கெல்சும் இணைந்து தயாரித்து வெளியிட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை உலகப் புகழ் வாய்ந்தது.

ஏங்கெல்ஸ் லண்டனுக்குச் செல்கின்ற பொழுது இரு நண்பர்களும் நேரடியாகச் சந்தித்துக் கொள்வார்கள். மார்க்ஸ் குடும்பத்தில் ஆனந்தம் பொங்கும். மார்க்ஸின் பெண் மக்கள் எங்கெல்ஸை சித்தப்பா என்றழைப்பார்கள். எங்கெல்ஸ் தன்னலமின்றிப் பல ஆண்டுகள் உதவி செய்திருக்காவிட்டால் மார்க்ஸுக்கும், அவர் குடும்பத்துக்கும் என்ன கதி ஏற்பட்டிருக்கும் என்பதைச் சொல்வது கடினம். அவர் தன்னுடைய நண்பரின் அறிவியல் ஆய்வுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவே தன்னுடைய சொந்த அக்கறைகளை ஒதுக்கி வைத்தார். மார்க்ஸ் இதை நினைத்து எப்போதுமே வருத்தமடைந்தார்.

மார்க்ஸ் மரணமடைந்த பிறகு எங்கெல்ஸ் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவரானார்.

மார்க்ஸின் மரணத்திற்குப் பின் மூலதனத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதிகளை முடிப்பது எங்கெல்ஸின் முக்கியப் பணியாயிற்று.

"மனிதகுல நன்மைக்காக நாம் சிறப்பாகப் பாடுபடுவதற்குரிய வேலையை நாம் தேர்ந்தெடுத்து விட்டால் அதன் எந்தச் சுமையும் நம்மை அழுத்த முடியாது. ஏனென்றால் அது எல்லோருடைய நன்மைக்காகவும் செய்யப்படுகின்ற தியாகம்"

இத்தகைய மார்க்ஸின் வரிகள் அர்த்த அடர்த்தி மிக்கவை என்பது மார்க்ஸுக்கும் அவருக்கு இரு கண்களாகத் திகழ்ந்த ஜென்னி மற்றும் ஏங்கெல்சுக்கும் பொருந்துமெனின் மிகையன்று.

*(மார்க்ஸ் நினைவு தினம் மார்ச் 14)*

- **பெரணமல்லூர் சேகரன்**

---

# வாசகர் கடிதம்

சென்ற மாத இதழ் படித்தேன். முன் அட்டையில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு நமது சங்கம் சார்பாக வர்க்கக் கடமையாற்றிய படம் அடடா அது வீரத்தின் விளைநிலம். சூடா ஒரு கோப்பையில் பிரசுரிக்கப்பட்ட கவிதை படித்தேன். பல ஆண்டுகளாக இதழ் வாசிக்கும் எனக்கு இதுபோன்ற கவிதை புதுமையாய் இருந்தது. இதுபோல் தொடர்ந்து கவிதைகள் வந்தால் சிறப்பாக இருக்கும். மற்றபடி தலையங்கம், பொதுச் செயலாளர் மேசையிலிருந்து மற்றும் இன்னபிற கட்டுரைகள் அனைத்தும் அருமையாய் இருந்தது. இந்த இதழ் தமிழக அரசுக்கு போர் முரசு கொட்டியது போல் சிறப்பாக் இருந்தது.

- ரா.தட்சிணாமூர்த்தி, கடலூர்

## ஆதியோகியால் அதிர்ந்த இயற்கை.....

அமைதி தேடி வந்தவர்களின்
ஆனந்த நடனத்தில்
அதிர்ந்து போனது
காடு...

இரை தேடப் போன
தாய்ப்பறவை
பேரதிர்வில் பயந்து
கூடு திரும்பாததால் பரிதவிக்கின்றன
பச்சிளம் குஞ்சுகள்...

வேட்டை முடிந்து திரும்பும் முன்
எழுந்த பெரும் கூச்சலால்
பாறை இடுக்கில் மறைத்து வைத்திருந்த
இன்னும் கண் திறவாக்
குட்டிகளைக் காணாமல்
உறுமி அழுகிறது
தாய்ச்சிறுத்தை...

வலசைப் பாதைகளை
மறித்த கட்டடங்களால்
வழியிழந்த
யானைக் குடும்பமொன்று
ஆனந்த நடனத்தின்
அலறல் ஒலியால்
பேருடல் சுமந்து
பிளிறி ஓடின....

நேற்றுபிறந்த மான்குட்டி
இரைதேடிப் போன
தாயில்லாமல்
புதர் மறைவில்
தவித்துக் கொண்டிருக்கிரது...

அழிவாளருக்குச்
சேவகம் செய்யும்
அதிகாரக் கரங்களால்
தடுக்கப் பட்டனர்
காலங்காலமாய் மலையேறும்
கடவுளின் பிள்ளைகள்..

தூங்கும்  குழந்தை மருளும் என மின்விளக்கை
ஏற்றத் தயங்கியவர்கள்..
உற்றார்க்கு ஆகாதென
உரக்கப்பேச விரும்பாதவர்கள்..
நாய்க் குட்டிக்காகப்
பட்டாசைத் தவிர்ப்பவர்கள்..
வசீகர வார்த்தைகளில் வீழ்ந்து
கூச்சமின்றிக்
கூடிக் கூச்சலிட்டனர்...

இரைச்சல் காடானது
அந்த ஈசன் மலை...

வெளிச்சக் காடானது எம்
வெள்ளிங்கிரி மலை...

கலங்கி நின்றன
கானக உயிர்கள்...

அந்த இரவில்
வேறு மலைக்கு வெளியேறினார்
வெள்ளிங்கிரி ஆண்டவர்..

*(சமூக வலைதளத்தில் படித்து, நொந்தது...*
*- **நாகை ஏ...ட்டீ...ஏ**)*

## தோழி எழுக !

அச்சம்,மடம்,
நாணம், பயிர்ப்பு -
பெண்ணை சிறைபிடிக்கும்
ஆதிக்க சூத்திரம்.

'உண்டி சுருங்க உண்,
உரக்கப் பேசாதே,
அடக்கமாய் சிரி,
ஆணுக்கு முன் அமராதே,
படிய தலையை சீவு,
படி தாண்டிய பதவி துற,
அடுக்களைக்கு திரும்பு'

உண்பது முதல் உறங்குவது வரை
வல்லோர் வகுத்த
வஞ்சனை வரையரைகள்.

தீதிது, தீயிட்டு பொசுக்கு.

தோழி, எழுக.
ஆணுக்கு நிகரென நில்.
அகிலம் ஆள விரைவாய்.

- **ஆர்.நடராஜன்**

**ஜாக்டோ-ஜியோ தொடர் மறியலுக்கு எதிராக போடப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்கள் போட்ட உத்தரவின் நகல்**

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
DATED : 26.02.2018
CORAM
THE HON'BLE MS. INDIRA BANERJEE, CHIEF JUSTICE
AND
THE HON'BLE MR.JUSTICE ABDUL QUDDHOSE
W.P.No.4191 of 2018

S.Sirgeth Naina Mohamed .. Petitioner

Vs.

1. Government of Tamil Nadu
   Rep. by its Secretary
   Home (Police) Department
   Fort St. George, Chennai-600 009.
2. The Director General of Police
   Chennai-600 009.
3. The Commissioner of Police
   Greater Chennai
   Office at Vepery, Chennai-600 008.
4. The Organizer, Jactto-Geo
   No.48 Car Street, Triplicane
   Chennai-500 005. Respondents

PRAYER: Petition under Article 226 of the Constitution of India for issuance of a writ of mandamus forbearing the members of the JACTTO GEO from in any manner resorting to any protest within the City of Chennai without obtaining prior permission from the competent authority, namely the third respondent, or any other authority.

For Petitioner : Mr.K.Sankar

For Respondents : Mr.T.N.Rajagopalan
Government Pleader
for respondents 1 to 3

ORDER

(Made by Ms.Indira Banerjee, Chief Justice)

This writ petition has been filed by the petitioner, a lawyer, in public interest seeking a writ of mandamus restraining the members of the Joint Action Committee of Teachers' Organizations - Government Employees Organization, commonly referred to as "*JACTO-GEO*", from resorting to protest within the city of Chennai in any manner, without obtaining permission from the competent authority.

2. The prayer in the writ petition is misconceived and/or not properly framed. This Court cannot restrain any citizen from protesting. For holding congregation and/or meetings in public parks, pavements, roads, etc., permission may be necessary. We are informed that permission has been refused. A letter dated 20.2.2018 in this regard has been made over in Court. However, the Court cannot restrain any teacher and/or any member of any organization from protesting, if such protest meetings are conducted within private premises and/or the compound of workplace beyond working hours, without affecting the public at large.

3. It is expected that teachers, being a responsible section of the society, who set an example for their students, will not voice their protest in a manner which disrupts traffic, inconveniences the people in general or sets a bad example for the students they teach.
The writ petition is dismissed. No costs.

(I.B., CJ.) (A.Q., J.) 26.2.2018

# நல்லவர் இலட்சியங்களை வெல்லவிடாமல் தடுக்கப்பார்க்கும் கூன்விழுந்த இயக்கங்களும், அடிவருடி அமைப்புகளும்!

**ஜா**க்டோ-ஜியோ அமைப்பினர் எந்தவித அனுமதியும் பெறாமல் சென்னை சேப்பாக்கத்தில் தொடர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும், இதனால் பொதுமக்களும், பள்ளி, கல்லூரிகள் செல்லும் குழந்தைகளும் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தொடர் மறியல் செய்வதற்கு தடை விதிக்க வேண்டும் என்று ஒரு மனுவை சிகிர்த நைனா முகம்மது என்ற ஒரு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். வழக்கம்போல் உயர் நீதிமன்றம் தொடர் மறியல் நடத்துவதற்கு தடை விதிக்கும் என்று எதிர்தரப்பினரும் அவர்களுக்கு தூண்டுதலாக இருந்த வெற்றுவேட்டுகளும் நினைத்திருந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் அம்மனுவை தள்ளுபடி செய்து வரலாற்று தீர்ப்பு மிக்க தீர்ப்புரையை வடித்திருக்கிறது.

மனுதாரரின் பிரதான நோக்கம் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு நடத்தும் தொடர் மறியல் போராட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதாகும். உண்மையில் மனுதாரருக்கு நமது கோரிக்கைகள், மறுக்கப்பட்டுள்ள உரிமைகள் பற்றித் தெரியுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி. அப்படியிருக்க இந்த மனுவை அந்த வழக்குரைஞர் தானாகவே தாக்கல் செய்திருப்பாரா என்ற அச்சமும் நமக்கு எழுகிறது. ஆகவே இந்த வழக்கு விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பது யாரோ மூன்றாம் நபர் அல்ல, நமக்கு எதிரான வேலைகளை எப்போதும் செய்யும் அடிவருடி அமைப்புகளும், கெஞ்சிப் பேசி காலில் விழுந்து காரியமாற்றலாம் என குனிந்து கிடக்கும் கூன்விழுந்த இயக்கங்களும்தான்.

மாண்புமிகு தலைமை நீதியரசர் அவர்கள் இந்த வழக்கு உத்தரவின் முதல் வரியிலேயே வழக்கு போட்ட நபர் மீது சாட்டையை வீளாசியிருக்கிறார். இந்த வழக்கு தவறான புரிதலில் போடப்பட்டுள்ளது என்றும், இந்த நீதிமன்றம் உரிமைக்காக போராடும் எந்தஒரு குடிமகனின் போராட்டைத்தையும் தடுக்காது என்றும் பளார் என்று அறைந்திருக்கிறார். பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ, போக்குவரத்து பாதிக்கும் வகையிலோ அவர்கள் போராடுவதாக இருந்ததால் உரிய அனுமதி பெற வேண்டும். இப்போது நடைபெறும் தொடர் மறியல் போராட்டம் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் தனிப்பட்ட இடத்தில் அலுவலக நேரத்திற்கு அப்பால் நடப்பதால் இந்நீதிமன்றம் அதில் தலையிட்டு தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று நெற்றிப்பொட்டில் குட்டு வைத்திருக்கிறது. அதேசமயம் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்கள் பொறுப்புணர்ந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாத வகையில் தங்கள் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும், அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு முன்மாதியாகத் திகழ வேண்டும் என்றும் அறிவுறுத்தி மேற்படி மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் வரலாற்றில் இந்த உத்தரவு ஒரு மைல்கல்லாகும். எப்போதுமே நீதிமன்றங்கள், அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு எதிராக உத்தரவிடும் என்று இறுமாந்திருந்தவர்களின் கம்பீரத்தை இது கபளீகரம் செய்துள்ளது. நியாயங்கள் வெல்லும் என்பதும் இந்த உத்தரவின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல் வரிகளான "உண்மை ஒருநாள் வெளியாகும், அதில் உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்" என்ற வரிகளுக்கு கிடைத்த முதல் வெற்றி இதுவாகும். நியாயமான உரிமைகளுக்காக நாம் நடத்தும் போராட்டங்கள் நிச்சயம் வெல்லும் என்ற புரிதலோடு அடுத்தடுத்த இயக்கங்களை நாம் தொய்வின்றி முன்னெடுப்போம் தோழர்களே. வெற்றி நமதே!

– மு.அ.

**ABSTRACT**

Constitution of Staff Rationalisation Committee – Appointment of Chairman and Terms of Reference – Orders – Issued.

---

**Finance (CMPC) Department**

**G.O.Ms.No.56** — **Dated:19-02-2018,**
**Hevilampi, Maasi-07,**
**Thiruvalluvar Aandu, 2049.**

*******

**ORDER:**

The Official Committee, 2017 constituted to make necessary recommendations on revision of scales of pay and allowances for State Government Employees and Teachers including employees of Local Bodies has inter-alia recommended to constitute a Staff Rationalisation Committee to evaluate the staff structure in various Departments and identify non-essential posts so as to reduce the revenue expenditure and also identify the categories of posts which can be outsourced or appointed through contract appointment for an initial period as a measure to control expenditure.

2. After careful consideration, the Government has decided to constitute a Staff Rationalisation Committee. Accordingly, Government constitutes a "Staff Rationalisation Committee" duly chaired by **Thiru.S.Audiseshiah, IAS (Retd.)**, former Principal Secretary to Government of Tamil Nadu.

3. Thiru.M.A.Siddique, I.A.S., Secretary (Expenditure), Finance Department shall be the Ex-officio Secretary to the Staff Rationalisation Committee. Orders in respect of the other supporting staff to the Committee shall be issued separately.

**TERMS OF REFERENCE:**

4. The following shall be the terms of reference for the Staff Rationalisation Committee:

i) To evaluate the staff structure in various departments and identify non-essential posts, so as to reduce the revenue expenditure and also identify the categories of posts which can be outsourced or appointed through contract appointment for an initial period as a measure to control expenditure.

ii) Consider any other relevant issue concerning administrative expenditure management in Government and Government agencies and make suitable recommendations.

5. The tenure of the Committee shall be for a period of six months from the date of constitution. The Committee shall submit its report to Government within the above period.

6. Other infrastructure requirements including computers will be made available by the Finance / Public Departments.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM,**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

19/2/18

**SECTION OFFICER.**

©
GOVERNMENT OF TAMIL NADU
2018

MANUSCRIPT SERIES

# FINANCE (PAY CELL) DEPARTMENT
## G.O.Ms.No.57, Dated: 19th February, 2018

*(Heyvilambi, Maasi-7, Thiruvalluvar Aandu 2049)*

**Tamil Nadu Revised Pay Rules, 2017**– Requests for rectification of pay anomalies – Constitution of One Man Committee – Orders –Issued.

---

**Read:**

G.O.Ms.No.303, Finance (Pay Cell) Department, Dated: 11.10.2017.

******

**ORDER:-**

Based on the recommendations of the Official Committee, 2017, orders have been issued in the Government Order read above replacing the existing system of Pay Bands and Grade Pay applicable to State Government employees and teachers including employees of local bodies by new system of level based Pay Matrix in a manner similar to that adopted by the Government of India for its employees notionally with effect from 01.01.2016 and with monetary benefit from 01.10.2017. The above revision was adopted on the basis of corresponding pre-revised pay scales and inspite of the immense fiscal stress, keeping the welfare of the Government employees in mind, Government implemented the pay revision on the basis of the recommendations of Official Committee, 2017 at an additional cost of Rs.14,719/- Crore per annum.

2) Representations are now being received from various Employees Associations seeking revision of pay levels and rectification of pay anomalies. The Hon'ble His Excellency of Governor of Tamil Nadu in his address in Tamil Nadu Legislative Assembly on 08.01.2018 has made an announcement to the effect that the Government will constitute a Committee to examine these representations.

3) After careful consideration, the Government has decided to constitute a One Man Committee to rectify the pay anomalies. Accordingly, Government direct that One Man Committee shall be constituted duly headed by Thiru M.A.Siddique, I.A.S., Secretary to Government (Expenditure), Finance Department.

4) The following are the terms of reference of the Committee:--

(i) Representations on pay anomalies, pay revision consequent on the implementation of the revised pay levels or clarification in the method of fixation of pay in the revised pay structure or other allied benefits including Special Pay, Allowances, etc., shall be examined by the One Man Committee.

(ii) The Committee shall examine all the representations received by it and make specific recommendations to the Government on the representations / anomalies considered by the Committee.

(iii) The Committee shall submit its report to Government by 31.07.2018.

5) All Departments of Secretariat and Heads of Departments are requested to furnish the details if any called for by the One Man Committee immediately.

6) As regards supporting staff to the One Man Committee, orders will be issued separately.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**//Forwarded by Order//**

**Section Officer**

# மாவட்டப் பேரவை

கிருஷ்ணகிரி மாவட்ட பேரவைக் கூட்டம் 10.2.2018 அன்று வெற்றிவேல் மகாலில் மாவட்டத் தலைவர் ந.சந்திரன் தலைமையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. சங்கக் கொடியை மாவட்டச் செயலாளர் சி.பி.ஜெயராமனும், ஏஐஎஸ்ஜிஇஎப் கொடியை மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபனும் ஏற்றி வைத்தனர். இணைச் செயலாளர் வி.காமராஜ் வரவேற்றார். துணைத் தலைவர் வி.தேவராஜ் அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். பேரவையை இந்தியன் வங்கி ஊழியர் மாநிலத் தலைவர் எஸ்.ஹரிராவ் துவக்கி வைத்து உரையாற்றினார்.

வேலை அறிக்கையை சி.பி.ஜெயராமனும், நிதிநிலை அறிக்கையை ஆர்.நடராஜனும் சமர்ப்பித்தனர். துறைவாரி, தோழமை சங்க நிர்வாகிகள் எம்.பாபு, எம்.பிரதாப், கோபால் கண்ணன், எம்.பெர்னாட் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட நிர்வாகிகள் எம்.கிருஷ்ணன், கே.தேன்மொழி, வி.கருப்பசாமி, ஆர்.நாகராஜன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

தொடர்ந்து மாநில மையத்திற்கு நிலுவையில்லா மாவட்டமாக நீடிக்கும் வகையில் 2018ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி நிலுவைத் தொகை ரூ.17,100, அரசு ஊழியர் இதழுக்கான 500 சந்தா தொகையான ரூ.40,000 மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய மாநாட்டு நிதியான 2ஆம் தவணைத் தொகை ரூ.1,00,000 ஆகியவற்றுக்கான காசோலையை மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபன் பெற்றுக் கொண்டு பேரவையை நிறைவு செய்தார். இதில்ல் 36 பெண் பிரதிநிதிகள் உட்பட 122 பேர் பங்கேற்றனர்.

மாலை 4 மணியளவில் மாவட்ட மகளிர் பேரவைக் கூட்டம் துணைக் குழு உறுப்பினர் டி.ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் பங்கேற்றனர். கே.ஜெயலட்சுமி நன்றி கூறினார்.

# வட்டப் பேரவை

பழனி வட்டக் கிளையின் 12வது பேரவை 17.2.2018 அன்று ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வட்டக் கிளைத் தலைவர் வி.வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. பேரவையை வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் ஆர்.மங்கலபாண்டியன் துவக்கி வைத்து உரையாற்றினார். துணைத் தலைவர் ஆர்.பாலசுப்பிரமணியம் வரவேற்றார். என்.ரமேஷ் செயலாளர் அறிக்கையினையும், எஸ்.நாகராஜன் நிதிநிலை அறிக்கையினையும் சமர்ப்பித்தனர். கிளை நிர்வாகிகள் எம்.பாலாஜி, ஆர்.ராஜேந்திரன், ஏ.காளிமுத்து, எஸ்.அய்யப்பன், பி.ரவி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். துறைவாரி சங்க நிர்வாகிகள் எஸ்.ராஜசேகரன், எஸ்.ஸ்டீபன் மனோகரன், எஸ்.தமிழ்செல்வி, ஏ.ராமசாமி, பி.லோகநாதன், எம்.ரவிக்குமார், என்.சக்திவேல், டி.கந்தசாமி, டி.ஜெயராஜ், டி.ரகுபதி, எஸ்.சந்திரசேகரன், பி.பிரபு, எல்.ஜீவா, ஆர்.எம்.ஆறுமுகம், எஸ்.மயில்சாமி, எஸ்.சங்கரநாராயணன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்டத் தலைவர் சி.தங்கவேல் நிறைவுரையாற்றினார். கே.இளங்கோ நன்றி கூறினார். ❖

# மொழிவது அன்பு

"பக்கத்து இருக்கை தோழி
பெயர் சொன்னாள் -
பணியில் சேர்ந்த
அறிமுகப் பொழுதில்.
நட்பின் நெருக்கத்தில்
பெயர்களும் தேவையற்று
பெண்பால் விகுதிகளால்
விளித்துக்கொண்டோம்.
பண்டிகை நாளொன்றில்
அலுவலக நண்பர்களுடன்
அவள் சைவமென்றாலும்
விருந்துக்கு அழைத்தேன்.
கை அலம்பும் போது
என் காதருகே சொன்னாள்,
'வீட்டு பழக்கத்தை
வீதிக்கு அழைக்கமாட்டேன்'.
சகோதரிகளாய்ப் பழக
சாதி, சமயம் தடையில்லை.

குர்ஆன், பைபிள்,
கீதை, கிரந்தம்
மதங்கள் வேறானாலும்
மொழிவது ஒன்றுதான்.
- அது அன்புதான்!"

- **ஆர்.நடராஜன்**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்கம்

சங்கத்தின் 8வது மாநில பிரதிநிதித்துவப் பேரவை சனிக்கிழமையன்று 10.2.2018 அன்று திருவள்ளூரில் தோழர் ம.கேசவமூர்த்தி அரங்கத்தில் நடைபெற்றது. இந்த மாநில பேரவைக்கு மாநில தலைவர் இரா.பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். வரவேற்பு குழு தலைவர் ஜி.இளங்கோவன் வரவேற்றார். சிஐடியு மாநில துணைத் தலைவர் இ.பொன்முடி துவக்கவுரையாற்றினார். மாநில பொதுச் செயலாளர் கி.முத்துகுமார் வேலை அறிக்கையை வாசித்தார். மாநில பொருளாளர் இ.ரேணுகாதேவி வரவு செலவு அறிக்கையை முன்மொழிந்தார். தலைமை நிலைய செயலாளர் எஸ்.வி.பாலசண்முகம் இதழ் அறிக்கையை வாசித்தார். மாநில முன்னாள் பொதுச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வாழ்த்தி பேசினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறையுரையாற்றினார். இதில் 199 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வரவேற்பு குழு செயலாளர் க.திவ்யா நன்றி கூறினார்.

சங்கத்தின் மாநிலத் தலைவராக இரா.பன்னீர் செல்வம், மாநில செயலாளராக கி.முத்துகுமார், பொருளாளராக எஸ்.வி.பாலசண்முகம், மாநில துணைத் தலைவர்கள் சு.சுரேஷ்குமார், ப.வேங்கடவரதன், மா.யோகராசு, கை.பார்த்தசாரதி, இ.ரேணுகாதேவி, மாநில செயலாளர்களாக கா.முருகானந்தம், அ.ஜோ.பார்த்திபன், சு.சுதாகர், வி.பி.முருகன், க.திவ்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் மாநில தணிக்கையாளர்களாக ம.ரமேஷ், வி.சீனிவாசன் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

## தமிழ்நாடு பொது சுகாதாரத் துறை ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராகப் பணிபுரிந்து வந்த செல்வி.மணிமாலா என்பவர், உயர் அலுவலர்களின் ஊழியர் விரோதப் போக்கினால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து, இதற்கு காரணமான மருத்துவ அலுவலர்கள் டாக்டர்.தமயந்தி மற்றும் சக்தி அகிலாண்டேஸ்வரி ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், காவல் துறை முதல் தகவல் அறிக்கை பதிந்து கைது செய்ய வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு நடைபெற்றது. அதனடிப்படையில்,

### கரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கரூர்-1 வட்டச் செயலாளர் பாலசுப்பிரமணி தலைமை தாங்கினார். தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளரும், அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டப் பொருளாளருமான பொன்.ஜெயராம், தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க மாநிலத் தலைவர் ஜீவானந்தம், பொது சுகாதாரத் துறை அடிப்படைப் பணியாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் செல்வன், செவிலியர்





சங்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர் திவ்யா, பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சரவணன், சாலைப் பணியாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி, தமிழ்நாடு ஆய்வக நுட்புனர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் செல்வராணி மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் ஆகியோர் கண்டன உரையாற்றினார். கரூர்-1 வட்டத் தலைவர் அறிவழகன் நன்றியுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் 120க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## திருப்பூர்

பொதுசுகாதாரத்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச்செயலாளர் தோழர்.சரவணன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளரும், அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டப் பொருளாளருமான பொன்.ஜெயராம், மாநிலத் துணைத் தலைவர் சி.செல்வக்குமார், மாவட்டச் செயலாளர் கோ.லட்சுமணன், பொது சுகாதாரத் துறை அடிப்படைப் பணியாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் செல்வன், வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சங்கர், செவிலியர் சங்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர் திவ்யா, பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கண்ணன், சாலைப் பணியாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் ஆகியோர் கண்டன உரையாற்றினார். பொது சுகாதாரத் துறை அடிப்படை பணியாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் அண்ணாதுரை நன்றியுரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் 120க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்





14.2.2018 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற துறைவாரி சங்கங்களின் தர்ணா போராட்டத்தில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர்



திருநெல்வேலியில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ கூட்டம்

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com